Registered as a Newspaper
பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 178
புதன்கிழமை
22 மே 2024
வைகாசி 09 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

புதன்பொய்கை

முச்சந்தி முரளி



" அப்ப சனிமட்டும் மழையின்ர ஆட்டம் தான் போல"

இலங்கையில் இனப்படுகொலை

# கனடாவின் கருத்தை நிராகரித்தது இலங்கை



கொழும்பு, மே 22

கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ, இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றது என்று தெரிவித்த கருத்துகளை ஸ்ரீலங்கா அரசாங்கம் கடுமையாகக் கண்டித்துள்ளதுடன், அவருடைய கருத்துகளுக்கு மறுப்பும் தெரிவித்துள்ளது.

15

## மயங்கி வீழ்ந்து ஒருவர் இறப்பு!

யாழ்ப்பாணம், மே 22

ஊரெழு கிழக்குப் பகுதியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த ஒருவர், திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். ஊரெழுப் பிள்ளை

15

## ஐஸ் போதையுடன் இளைஞன் கைது!

யாழ்ப்பாணம், மே 22

ஐஸ் ரக போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வடமராட்சிக்கு ஐஸ் போதைப்பொருளைக் கடத்திச் சென்றபோதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். இரகசியத் தகவலுக்கு அமைய நெல்லியடிப் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட வீதிச் சோதனை நடவடிக்கையின்போதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவரிடம் இருந்து 210 மில்லிக்கிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டதுடன், அவர் மேலதிக சட்ட நடவடிக்கைக்கும் உட்படுத்தப்பட்டுள்ளார். (அ-ம-100)

இராமாயணப் பின்னணியில்

## இலங்கை - இந்தியா இடையே வலுவான உறவுநிலை ஏற்படும்!

வெளிவிவகார அமைச்சர் நம்பிக்கை

புதுடில்லி, மே 22

இந்தியா மற்றும் இலங்கை இடையே, இராமாயணத்தை அடிப்படையாகக் கொண்ட வலுவான உறவுகள் ஏற்படுத்தப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கியிருக்கும் நேர்காணலில் அலி சப்ரி மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை - இந்தியாவுக்கு இடையில் நீண்டகாலமாக பல்துறை சார்ந்த

15

## ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடைபெறும்!



அடுத்தமாதம் அறிவிப்பு

கொழும்பு, மே 22

ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடக்கும், அதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று

15

ரைசியின் இறுதிச்சடங்கு:

## ஈரான் பறந்தார் அலி சப்ரி

கொழும்பு, மே 22

ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்த ஈரான் ஜானதிபதி இப்ராஹிம் ரைசியின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்காக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நேற்று இரவு ஈரானுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

15

சீரற்ற காலநிலை

## மீனவர்களே அவதானம்

யாழ்ப்பாணம், மே 22

யாழ்ப்பாணக் குடாநாட்டுக் கடற்பரப்புகளில் இன்றும், நாளையும் மீன்பிடி நடவடிக்கைகளை முன்னெடுக்கும்போது மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு, யாழ்ப்பாணக் குடாநாட்டு மீனவர்களுக்கு

15

## சந்திரன் பூங்காவிலிருந்து இராணுவமே வெளியேறு!

நேற்றுப் போராட்டம்

கிளிநொச்சி, மே 22

கிளிநொச்சி சந்திரன் பூங்காவை விட்டு, சிறிலங்கா இராணுவம் உடனடியாக வெளியேறவேண்டும் என்று வலியுறுத்தி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பலத்த பாதுகாப்புக் கெடுபிடிகளுக்கு மத்தியில், இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. சந்திரன் பூங்கா கிளிநொச்சி மண்ணின் சொத்து. அங்கிருந்து இராணுவம் உடனடியாக வெளியேறவேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்

15

புதுப்பிக்கத்தக்க மின்சாரம்

## தாய்லாந்துக் குழு இலங்கை வருகை

கொழும்பு, மே 22

புதுப்பிக்கத்தக்க வலுசக்தி ஒத்துழைப்பை ஆராய்வதற்காக தாய்லாந்து அதிகாரிகள் மற்றும் தனியார்துறை பிரதிநிதிகள் அடங்கிய உயர்மட்டக் குழுவொன்று இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளது.

வெளியுறவுகள் அமைச்சு, வலுசக்தி அமைச்சு, தாய்லாந்து தூதரகம், தாய்லாந்து மின்னுற்பத்தி நிறுவனம், பி.டி.டி. நிறுவனம் மற்றும் குளோபல் பவர் சினெர்ஜி பப்ளிக் கம்பெனி லிமிட்டெட் உட்பட பல்வேறு தாய்லாந்து நிறுவனங்கள் மற்றும் தனியார்துறை அதிகாரி

15

## சனி வரையில் வடக்கில் மழை

யாழ்ப்பாணம், மே 22

எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை வரை வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கனமானது முதல் மிகக்கனமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளதாக யாழ். பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள

15

## பாடசாலைகளுக்கு விடுமுறை இல்லை!

கொழும்பு, மே 22

காலநிலைச் சீர்கேடுகளால் நாடளாவிய ரீதியில் சகல பாடசாலைகளும் இன்று புதன்கிழமை மூடப்படுமெனச் சமூக வலைத்தளங்களில் பரவிவரும் தகவல் பொய்யானது எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வி அமைச்சு நேற்றுச் செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்துப் பாடசாலை

15

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே.வி.பி. ஆட்சியில் 25 அமைச்சர்களே!!

**கொழும்பு, மே 22**

**தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி.) ஆட்சியில் அமைச்சரவை எண்ணிக்கை 25 ஆக வரையறுக்கப்படும் எனவும், அமைச்சருக்கு ஆலோசனை வழங்க சபையொன்று உருவாக்கப்படும் எனவும் அக்கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.**

தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் வெளிவிவகார அமைச்சர் நீங்களா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அவ்வாறு இன்னும் தீர்மானிக்கவில்லை. தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளரை மாத்திரமே தற்போது தெரிவுசெய்துள்ளோம். தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் பிரதமர் யார், வெளிவிவகார அமைச்சர் யார், அமைச்சரவைக்கு நியமிக்கப்படும் நபர்கள் தொடர்பில் தீர்மானம் இல்லை. எனினும், அமைச்சரவையில் எண்ணிக்கை 25 ஆகவும், இராஜாங்க அமைச்சர்களின் எண்ணிக்கை 25 ஆகவும் காணப்படும்.

அமைச்சருக்கு ஆலோசனை வழங்க சபையொன்று நிறுவப்படும். அதில் துறைசார் நிபுணர்கள் இருப்பார்கள். அவர்களுக்கு சம்பளம், சலுகைகள் வழங்கப்படமாட்டாது. அவர்கள் தன்னார்வ அடிப்படையில் சேவையாற்றுவார்கள்- என்றார். (ஒ-44)



## விவாதம் ஜூன் 6?

கொழும்பு, மே 22

நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான விவாதம் அடுத்த மாதம் நடக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சஜித் பிரேமதாஸ வழங்கிய திகதிகளில் ஜூன் 6 ஆம் திகதியை அநுரகுமார திஸாநாயக்க ஏற்றுக்கொண்டுள்ளார் என தேசிய மக்கள் சக்தியின் செயற்குழு உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். மேலும் விவாதம் நடைபெறும் இடம் மற்றும் நேரம் குறித்து விவாதத்தைத் தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டாரவுடன் கலந்துரையாடி தீர்மானிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## இந்தியாவின் பாதுகாப்புக்கு இடையூறு விளைவிக்கோம்

*வெளிவிவகார அமைச்சர் சுட்டிக்காட்டு*

கொழும்பு, மே 22

அண்டை நாடு என்ற வகையில், இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் யாரையும் இலங்கை அனுமதிக்காது என்று இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் என்ற சந்தேகத்தில் நான்கு இலங்கையர்கள் இந்தியாவில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு நலன்களை நாம் உறுதிப்படுத்துகிறோம். நாங்கள் அனைத்து நாடுகளுடனும் இணைந்து பணியாற்ற விரும்புகிறோம். தற்போது இந்தியாவில் இடம்பெறும் நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் எதுவாக இருந்தாலும் இலங்கை இந்தியாவுடன் ஒத்துழைக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

## எம்.பி.க்கள் எவருக்கும் இரட்டைக் குடியுரிமையில்லை

கொழும்பு, மே 22

இரட்டைக் குடியுரிமையுடைய எவரும் நாடாளுமன்ற உறுப்பினராக அங்கம் வகிக்கவில்லை என்று பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் தகவல்களுக்கு அமைய இந்த விடயத்தை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இரட்டைக் குடியுரிமையைப் பெற்றுக் கொண்டிருந்தால் அல்லது அதற்காக விண்ணப்பம் செய்திருந்தால் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்துக்குத் தெரிந்திருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)


## சிறை அதிகாரிகளுக்கு மேலதிக கொடுப்பனவு

கொழும்பு, மே 22

சிறைச்சாலை அதிகாரிகளுக்கு 15 ஆயிரம் ரூபா மேலதிக கொடுப்பனவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் விவகார அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார். 25 ஆயிரம் ரூபா வேதன உயர்வைக் கோரி சிறைச்சாலை அதிகாரிகள் சுகவீன விடுமுறையை அறிவித்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அதன்படி வேதன அதிகரிப்புக்கு முன்னர் 15,000 ரூபாவை மேலதிக கொடுப்பனவாக வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார். (ச-இ)



## களுத்துறையில் துப்பாக்கிச்சூடு

கொழும்பு, மே 22

களுத்துறை - கட்டுக்குருந்த பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவரின் வீட்டில் வைத்து இந்தத் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## இலங்கைச் சந்தையில் இந்திய எரிபொருள்

கொழும்பு, மே 22

முதன்முறையாக இந்தியன் எண்ணெய் நிறுவனம் இலங்கைக்கு புதிய வகை பெற்றோலை ஏற்றுமதி செய்துள்ளது.

100 ஒக்ரேன் சுப்பர் ரக பெற்றோல் கையிருப்பே இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

'XP100' எனப் பெயரிடப்பட்ட இந்தப் பெற்றோல், இந்தியாவால் உள்நாட்டிலேயே தயாரிக்கப்படுகிறது எனவும், உயர்செயற்றிறன் எஞ்சின் செயற்றிறன், வேகமான முடுக்கம், மென்மையான இயக்கம் மற்றும் பிரீமியம் வாகனங்களுக்கான மேம்பட்ட எரிபொருள் சிக்கனத்துக்காக உருவாக்கப்பட்டுள்ளது என்று இந்தியன் ஒயில் நிறுவன இயக்குநர் வி. சதீஷ்குமார் தெரிவித்துள்ளார். (ச-இ)



## உன்னத தலைமையை இழந்துவிட்டது ஈரான்

*எதிர்க்கட்சித் தலைவர் இரங்கல்*

கொழும்பு, மே 22

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி மறைவு வேதனையளிக்கிறது. ஈரான் அசைக்கமுடியாத உன்னதமான தலைமையை இழந்துவிட்டது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இரங்கல் வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில்,

இந்தச் சோகம் ஈரானுக்கு மட்டுமல்ல, முழுப் பிராந்தியத்துக்கும் அதற்கு அப்பாலும் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த தருணத்தை பிரதிபலிக்கிறது.

மிகவும் இக்கட்டான இந்த நேரத்தில் அவரது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் ஈரான் மக்களுடன் நமது எண்ணங்களிலும் பிரார்த்தனைகளிலும் நாம் ஐக்கியமாக இருப்போம்.

பாரசீகர்களின் வரலாற்றில் அழியாத நினைவைக் குறிக்கும் அவரது நீடித்த மரபுரிமையில் ஈரானியர்கள் ஆறுதல் பெறட்டும் - என்றுள்ளார். (ச-இ)

## வாகன அனுமதிப்பத்திரம்: 82 எம்.பி.க்கள் கோரிக்கை

கொழும்பு, மே 22

82 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாகன அனுமதிப்பத்திரத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். எப்படியும் இதை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்போம் என தேசிய மக்கள் சக்தி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். நாட்டில் வாகன இறக்குமதிக்கு தடைவிதிக்கப்பட்டுள்ள நிலையில் இவர்கள் வாகன அனுமதிப்பத்திரம் கோருகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மதுபானசாலைக்கு மக்கள் கடும் எதிர்ப்பு

## நானாட்டானில் போராட்டம்

நானாட்டான் நகரப் பகுதிக்குள் மதுபானசாலைக்கும் அனுமதி வழங்கவேண்டாம் என வலியுறுத்தி நானாட்டான் பிரதேச செயலகத்துக்கு முன்பாக அடையாள கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முன்னெடுத்தனர். மதத்தலைவர்கள் மற்றும்பொது மக்கள் இணைந்து இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர். நானாட்டான் சுற்றுவட்டத்திலிருந்து நானாட்டான் பிரதேசசெயலகம்வரைகோஷங்களை எழுப்பிய மக்கள் ஊர்வலமாகச் சென்றனர். போராட்டத்தில் அருட்தந்தையர்கள், இந்து ஆலயக் குருக்கள், முருங்கன் விகாராதிபதி, நானாட்டான் பிரதேசசபை முன்னாள் உறுப்பினர்கள், மாதர் சங்க உறுப்பினர்கள் எனப் பலரும் போராட்டத்தில் கலந்துகொண்டனர். (ப-213)

# ஏப்ரல் மாதத்தில் உற்பத்தி வீழ்ச்சி

கொழும்பு, மே 22

**கடந்த ஏப்ரல் மாதத்தில் நாட்டில் உற்பத்தி நடவடிக்கைகளில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.**

மார்ச் மாதத்தில் 62.05 வீதமாக இருந்த உற்பத்தித் துறையின் இலங்கைக் கொள்வனவு முகாமையாளர்களின் சுட்டெண் கடந்த மாதத்தில் 42 வீதமாகப் பதிவாகியுள்ளது.

இந்த மாதத்தில் புதிய முன்பதிவு, உற்பத்தி, வேலை வாய்ப்பு மற்றும் மொத்தக் கொள்முதல் குறியீடுகளில் ஏற்பட்ட சரிவின் விளைவாக ஒட்டுமொத்த சுட்டெண் வீழ்ச்சியடைந்துள்ளது என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது. சிங்கள மற்றும் தமிழ்ப் புத்தாண்டு விடுமுறைகள் காரணமாக ஏப்ரல் மாதத்தில் பல தொழிற்சாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டமையே இந்தப் பின்னடைவுக்கு முக்கியமான காரணம் எனவும், நீண்ட விடுமுறை காரணமாக விநியோகஸ்தர்கள் முன்பதிவை வழங்குவதற்கு எடுத்துக்கொண்ட நேரம் முன்னையதை விட ஏப்ரலில் வேகமாக அதிகரித்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# மணலுடன் சாரதிகள் கைது



கிளிநொச்சி, மே 22

அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட இடத்தில் மணல் அகழாமல் வேறு இடத்தில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் 4 டிப்பர்களின் சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களின் 4 டிப்பர்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ஒ-113)

# மருந்துத் தட்டுப்பாடு ஆராயத் தீர்மானம்

கொழும்பு, மே 22

மருந்துப் பொருள்களுக்கு நாட்டில் தட்டுப்பாடு நிலவுகின்றதா என்பது தொடர்பாகவும், சுகாதார ஊழியர் இடமாற்றக் கொள்கை தொடர்பாகவும் இலங்கை மருத்துவ நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் கவனம் செலுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு சுகாதார அமைச்சு மற்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் அதிகாரிகளை அழைக்க ஒன்றியம் தீர்மானித்தது.

தனியார் மருத்துவமனைகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் விசேட மருத்துவநிபுணர்களின் பணி மற்றும் மேற்பார்வை குறித்தும் ஒன்றியத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது. (எ-இ)

# மூளைக்காய்ச்சலால் கைதி உயிரிழப்பு

கொழும்பு, மே 22

மூளைக் காய்ச்சலால் மாத்தறை சிறைச்சாலையில் கைதி ஒருவர் உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

மாத்தறை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த கைதி நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார் என்று சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. 24 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு காய்ச்சலால் உயிரிழந்துள்ளார். அதேவேளை, அதே சிறைச் சாலையைச் சேர்ந்த மற்றுமொரு கைதியும் காய்ச்சல் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ-இ)

# பெரமுனவின் வேட்பாளராக ரணில் களமிறங்கமாட்டார்

## நாமல் திட்டவட்டம்



கொழும்பு, மே 22

ரணில் விக்கிரமசிங்க என்பவர் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர், மொட்டுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரை கட்சியே தீர்மானிக்கும் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் எந்தத்தேர்தல் நடைபெற்றாலும் அதனை எதிர்கொள்வதற்கு நாம் தயார். விரைவில் தேர்தலொன்று நடைபெறவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளோம். உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்பட்டால்கூட பரவாயில்லை. மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டால் அத்தேர்தலிலும் களமிறங்கத் தயார். ரணில் விக்கிரமசிங்க தற்போது ஐக்கிய தேசியக்கட்சியின் வேட்பாளர், மொட்டுக் கட்சியின் வேட்பாளரை எமது கட்சியே முடிவெடுக்கும். ஜனாதிபதியின் சில கொள்கைகள் தொடர்பில் விமர்சனங்கள் உள்ளன. அதனை வெளிப்படுத்துவதற்கு நாம் தயங்கமாட்டோம். வெளிப்படையாகவே அறிவித்தும் இக்கின்றோம். ஆனால் எங்களை அக்க போராடுவோம் - என்றார். (ஒ-44)

# தினம் தெரியுமோ

இந்தியாவிலஇருந்துகாங்கேசன்துறைக்கு கப்பல் ஓடுறதும் பிள்ளையாரின்ர கலியாணமும் நடந்த மாதிரித்தான். போனவருசமும் பெரும் இழுபாட்டுக்குப் பிறகுதான் 'செரியாபாணி' என்ட படகு கொஞ்சநாள் நாகைப்பட்டினத்துக்கும், காங்கேசன்துறைக்கும் இடையில ஓடினது. பிறகு மாரி மழை முடியத்தான் 'செரியாபாணி' ஓடுமெண்டு நிப்பாட்டினவை. ஆனால் மழை விட்டு ஒரு மாதங் கடந்தும் செரியாபாணியைப் பற்றி ஒருகதையும் இல்லை. உந்த ரீவி நாடகங்களில ' அவருக்குப் பதில் இனி இவர்' என்டமாதிரி செரியாபாணிக்கு பதிலா இன்னொரு கொம்பனியால, வேற ஒரு படகு ஓடும் எண்டு அறிவிச்சு, அதுக்கு முன்பதிவும் செய்தவை. இப்ப அந்தப் படகும் ஓடுற சிலமனைக் காணேலை. எப்பிடி செரியாபாணியை 'இன்டைக்கு ஓடும், நாளைக்கு ஓடும்' எண்டு பேய்க்காட்டிச் சினமோ அதே கதைதான் இதுக்கும் நடக்குது. உந்தப் படகை ஓடுறதில அப்பிடி என்னதான் இழுபாடு இருக்கோ தெரியேலை. அதைவிட ஏன் செரியாபாணியை நிப்பாட்டி புதுப் படகைக் கொண்டந்தவை என்ட கேள்விக்கும் இன்னும் விடையில்லை. கப்பல் ஓடப்போறம் எண்டிட்டு சுற்றுலாப் படகை ஓட விடேக்கையே உதுக்குள்ள ஏதோ ஒரு சிக்கல் எண்டு எல்லாருக்கும் விளங்கினது. ஆனால் அந்தச் சிக்கல் என்ன எண்டது மட்டும்தான் விளங்குதில்லை.

'இந்தியாவுக்கு கப்பல் ஓடப்போகுதாம்' என்ட கதை வந்த உடனேயே எங்கட சனம், ஏதோ பென்னம் பெரிய கப்பல் ஓடப்போகுதெண்டுதான் நினைச்சவை. சண்டைக்காலத்துக்கு முதல் 1984 ஆம் ஆண்டு வரைக்கும் தலைமன்னாரில இருந்து ராமேஸ்வரம் வரைக்கும் 'ராமானுஜம் படகுச் சேவை' ஓடினது. அதுவும் 350 பேரை ஏத்தக்கூடிய படகுதான். முந்தி ஒரு விசேசம் என்னவெண்டால், எங்கட நாட்டு ரயில்வே ஸ்ரேசனிலயே இந்தியாவின்ர எந்த இடத்துக்கும் ரெயின்ல போக ரிக்கெற் எடுக்கலாம் எண்டதுதான். உதாரணமா ஒராள் யாழ்ப்பாணம் ரெயில்வே ஸ்ரேசனிலயே டெல்லிக்குப் போற ரெயினுக்கும் இஞ்சையே காசைக் கட்டி ரிக்கெற்றை எடுத்துக்கொண்டு, படகுக் காசு 150 ரூபா கட்டி ராமானுஜம் படகில போய் இராமேஸ்வரத்தில இறங்கி, அப்பிடியே ரிக்கெற்றை காட்டி ரெயின்ல ஏறி டெல்லிக்குப் போகலாம். அப்பவே அப்பிடியெல்லாம் இருக்க, இப்ப கப்பல் ஓடப்போறம் எண்டிட்டு 1984 ஆம் ஆண்டு ஓடினமாதிரி ஒரு படகைத்தான் ஓட விட்டவை. அதோட அந்தப் படகு தூர ஓட்டத்துக்கு பெரிசா நிண்டு பிடிக்காது.

செரியாபாணியோட ஒட்டிப் பிறந்த மாதிரி ஒரு படகை ரண்டு வருசத்துக்கு இலங்கை நேவி காங்கேசன்துறையில கொண்டந்து ஓடவிட்டது. காங்கேசன்துறையில இருந்து நெடுந்தீவு மட்டும் சுற்றுலா போற ஆக்கள் காசு கட்டிப் போகலாம் எண்டு வெள்ளோட்டமெல்லாம் விட்டவை. ஆனால் பிறகு அதையும் காணேலை. பேந்து பார்த்தால் அந்தப் படகை உரிச்சு வைச்சமாதிரி செரியாபாணி இந்தியாவில இருந்து வந்திச்சு. பிறகு 'மழைக்குள்ள ஓடினால் கரைஞ்சு போடும்' எண்டு நிப்பாட்டினதோட சரி. ஆனால் இப்பிடி உந்தப் படகுகள் ஓடாமல் இழுத்தடிக்கிறதுக்குப் பின்னால சில 'பிளேன்' ஓடுற கொம்பனியள் இருக்கெண்டும் ஒரு கதை அடிபடுகுது. படகு ஓடினா அவையின்ர யாவாரம் இல்லாமல் போடுமெல்லோ. அதுக்குத்தான் இப்பிடி ஓடவிடாமல் பாக்கினமாம். எல்லாம் கடலுக்குத்தான் வெளிச்சம்.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஒத்துழைப்பு கிடைக்கும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. பெருமை உண்டாகும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**இடபம்:** காரியங்கள் அனுகூலமாகும். உறவினர்கள் மூலம் கிடைக்கும் செய்தி மகிழ்ச்சி தரும். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குவீர்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும். நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**மிதுனம்:** திடீர்ச் செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பிள்ளைகளுக்காக செலவு செய்யவேண்டி வரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்:** மனதில் சோர்வு ஏற்படக்கூடும். செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். உடல்நலனில் கவனம் தேவை. உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். பொறுமை மிக அவசியம்.

**சிம்மம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். உடல் அசதி உண்டாகும். மனவருத்தங்கள் நீங்கி சுமுகமான உறவு ஏற்படும். வெற்றியே ஏற்படும். இலாபமும் எதிர்பார்த்தபடி இருக்கும்.

**கன்னி:** முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு மிகவும் உகந்த நாள். ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத பணவரவும், திடீர் செலவுகளும் ஏற்படும். இடையூறுகள் விலகும்.

**துலாம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிர்பாராத செலவுகள் ஏற்படும். அலைச்சல் ஏற்படலாம். சிறுசிறு குழப்பங்கள் ஏற்படும்.

**விருச்சிகம் :** மகிழ்ச்சியான நாள். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்தவும். சிலருக்கு மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் கைக்கு வந்து சேரும். ஆதாயம் கிடைக்கும். நண்பர்கள் மகிழ்ச்சி உண்டாகும். ஆஞ்சநேயரை வழிபட எண்ணங்கள் நிறைவேறும்.

**மகரம்:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். சிலருக்கு திடீர்ப் பணவரவுக்கும், திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. பேச்சினால் பிரச்சினை வர வாய்ப்பு உள்ளது. பேசும்போது வார்த்தைகளில் நிதானம் தேவை.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தொடங்குவது சாதகமாக முடியும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. எதிரிகள் மற்றும் பழைய கடன்கள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும். சிலருக்குவீண் அபவாதம்ஏற்படக்கூடும்.

**மீனம்:** எதிலும் சிந்தித்தும் பொறுமையுடனும் செயற்படவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். அலைச்சல் உண்டாகும். காரிய அனுகூலம் ஏற்படும்.

# ஈரான் ஜனாதிபதி ரைசியின் அர்ப்பணிப்பு அளப்பரியது!

## தேசிய மக்கள் சக்தி இரங்கல்

கொழும்பு, மே 22

ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்த ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி மற்றும் ஈரான் இராஜதந்திரிகளின் திடீர் மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபங்களை பகிர்வதாக தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் மறைவு மத்திய கிழக்கு மக்களுக்கு மாத்திரமன்றி உலக மக்கள் அனைவருக்கும் நிவர்த்திசெய்ய இயலாத இழப்பாகும். இலங்கை உள்ளிட்ட பெரும்பாலான நாடுகளுடன் நட்புறவையும் ஆதிக்கவாதமற்ற உறவையும் பலப்படுத்திக் கொள்வதற்காக அயராது உழைத்தவர் ரைசி. கவலைக்குரிய இந்தத் தருணத்தில் ஈரானிய மக்களுக்கும் அவரது உறவினர்களுக்கும் ஆழ்ந்த இரங்கல்கள் என்றும் தேசிய மக்கள் சக்தி தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

# யோகக்கலை பயிற்சி விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், மே 22

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, இளைஞர்களுக்கான இலவச யோகக் கலை சான்றிதழ் பயிற்சிநெறியின் பிரிவு-2 க்கான வகுப்புகள், 3 மாத காலப் பகுதி வரை, வார இறுதி நாள்கள் மற்றும் அரச விடுமுறை நாள்களில் நடைபெறவுள்ளன.

பயிற்சிநெறியானது, நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் எதிர்வரும் 1 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணி தொடக்கம் காலை 8 மணி வரை நடைபெறவுள்ளது. பயிற்சிநெறிக்கான விண்ணப்பங்களை இளைஞர் விவகார அலகில் பெற்றுப் பூர்த்தி செய்து, பயிற்சி ஆரம்ப நாளில் ஒப்படைக்க முடியும் என அறிவித்துள்ளனர். (ப)




## 'போரின் சாட்சியம்' நூல் சுவிற்சர்லாந்தில் வெளியீடு

சுவிற்சர்லாந்து, மே 22

போர்க்கால ஊடகவியலாளர் சுரேன் கார்த்திகேசு எழுதிய 'போரின் சாட்சியம்' எனும் நூல் சுவிற்சர்லாந்தில் அண்மையில் வெளியிடப்பட்டது.

2007 முதல் 2009 வரையான தமிழின அழிப்பு தீவிரமாக முன்னெடுக்கப்பட்ட இறுதி மூன்று ஆண்டு காலப்பகுதிகளின் நேரடி அனுபவங்களைத் தொகுத்து எழுதப்பட்ட இந்நூலினை, இறுதிப் போர்க்காலப் பகுதியில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக செயலராகக் கடமையாற்றிய கந்தசாமி பார்த்தீபன் வெளியிட்டு வைக்க, போரில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சத்தியமூர்த்தியின் மனைவி நந்தினி பெற்றுக்கொண்டார். (ப-100)

## புதிய நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம், மே 22

இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின், வவுனியா மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் புதிய நிர்வாகத்தெரிவு மாவட்ட முன்னாள் சம்மேளனத் தலைவர் விந்துஜன் தலைமையில் வவுனியா தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதிகளாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வவுனியா மாவட்ட உதவிப்பணிப்பாளர் ரவீந்திர, மாவட்ட இளைஞர் சேவை அதிகாரிகளான ஐ.சுகானி, ஜஸ்மின், இல்ஹாம் மற்றும் ஜயலத் ஆகியோர் கலந்து கொண்டனர். வவுனியா மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் புதிய தலைவராகவும், மாவட்ட தேசிய பிரதிநிதியாகவும் கணேசலிங்கம் சிம்சுபன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (25-18)



திருக்கேதீஸ்வர ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந்திருவிழாவின் 7 ஆம் நாள் விசேட திருக்கல்யாண உற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதேவேளை நேற்றுச் செவ்வாய்க்கிழமைதேர்த்திருவிழாவும் இன்று புதன்கிழமை தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (ஏ-இ)

## ஆரம்ப நிகழ்வு

கொழும்பு, மே 22

இலங்கை அந்திம கால சிகிச்சை மருத்துவக் கல்லூரி ஏற்பாடு செய்திருந்த, இலங்கை அந்திம கால பராமரிப்போர் கூட்டமைப்பின் ஆரம்ப நிகழ்வு, பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

சுகாதார அமைச்சின் செயலாளர் மருத்துவர் பாலித மஹிபால, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மருத்துவ ஆதாரங்களின் அடிப்படையிலான அந்திம கால சிகிச்சை மற்றும் பராமரிப்பை மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்தக் கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ப)

## நிர்வாகத்தெரிவு

யாழ்ப்பாணம், மே 22

சேர் பொன். இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக்கலைகள் பீடத்தின் பழைய மாணவர் ஒன்றியத்துக்கான நிர்வாகத்தெரிவு, மருதனார்மடத்திலுள்ள கட்புலக் கலைகள் பீடத்தின் அரங்கில் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் புலம்பெயர் வாழ் பழைய மாணவர்களுக்கு மெய்நிகர்நிலையாகவும் இணைவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் இசை, வாத்தியஇசை, நடனம், ஓவியம், சிற்பம் மற்றும் நாடகமும் அரங்கியலும் ஆகிய துறைகளில் பட்டதாரிகளாக வெளியேறிய மாணவர்களை ஒன்றுகூடலில் கலந்துகொள்ளுமாறு பீட நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (எ-25)

# அரசாங்க அலுவலருக்கு கடனுதவி

யாழ்ப்பாணம், மே 22


அரச உத்தியோகத்தர்களுக்கு கடன் வழங்கும் திட்டம் நாட்டிலுள்ள சமுர்த்தி வங்கிகளில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. அரச அலுவலகங்களில் நிரந்தரப் பதவியில் உள்ளவர்கள் தத்தமது பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் ஊடாக சமுர்த்தி வங்கிக்கு விண்ணப்பித்து தலா 10 லட்சம் ரூபாவரை கடனாகப் பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை சமுர்த்தி வங்கிகளில் நிரந்தர வைப்புச் செய்ய விரும்பும் பொதுமக்கள் அருகில் உள்ள சமுர்த்தி வங்கியில் வைப்புச் செய்யலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-25-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### திரு. விசுவலிங்கம் கந்தசாமி

**(முன்னாள் உள்ளக கணக்காய்வு முகாமையாளர் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்)**



**பிறப்பு 21.01.1944 — இறப்பு 21.05.2024**

வட்டுக்கிழக்கு வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் கந்தசாமி (முன்னாள் உள்ளக கணக்காய்வு முகாமையாளர் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்) அவர்கள் நேற்று (21.05.2024) செவ்வாய்க் கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற விசுவலிங்கம் - சரஸ்வதி தம்பதியினரின் அன்புமகனும் காலஞ்சென்ற முருகேசம்பிள்ளை-சிதம்பரம் தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற ராணிமலர் (முன்னாள் ஆசிரியை) அவர்களின் பாசத்துக்குரிய கணவரும் தெய்வநாயகி. சச்சிதானந்தன். சரவணபவன் ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2024) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் கோம்பயன் மணல் இன்பம் மலர்ச்சாலையில் இடம்பெறும் இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**

**வட்டுக்கோட்டை** — **குடும்பத்தினர்.**

(CS 42484) V-1

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

**Vacancy Advertisement for Mechanic Level 1 – 2 Positions**

The HALO Trust is the world's largest and oldest international humanitarian mine action non-government organization (NGO). For over thirty years, we have been saving lives and helping war-torn communities recover, by making their land safe. Our mission is to protect lives and restore the livelihoods of those affected by conflict. HALO has been working in Sri Lanka since 2002 and now has over 1,000 staff working in the Northern Province with offices in Jaffna, Kilinochchi and Mullaitivu.

We are looking to recruit 2 Mechanics based in Kokkuththoduwai, Mullaitivu. The purpose of this job is to work as part of HALO's workshop team to ensure the maximum number of programme vehicles are operational.

**Job title: Mechanic Level 1**
Salary: LKR 54,350.00 per month (after tax, EPF, and ETF)
Location: Kokkuththoduwai
Reports to: Workshop Manager/Assist Workshop Manager/
Work cycle/ Working hours: Support staff/ops cycle.

**Main responsibilities:**

- Support The Workshop with All Daily Workshop Activities as Assigned by Workshop Manager/Assist Workshop Manager/Mechanic Level4.
- Perform Preventative Maintenance on Vehicles, Mechanical Plants, Machinery, Accessories, and Components.
- Perform breakdown maintenance and corrective maintenance on vehicles, machinery, mechanical plants.
- Perform scheduled maintenance on vehicles, mechanical plants, and machinery. (Scheduled by the manufacturer for routine checks, replacements, and inspections.)
- Perform skilled work under close supervision for training purposes.
- Performing tasks assigned by supervisors, such as replacing defective parts.
- Be sure to follow all workshop procedures and rules.
- Ensuring That the Workshop, All Tools, and Equipment and The Spare Parts Stores Are Kept Tidy, Safe and Secure.
- Any Other Duties as Specified by Workshop Manager/Assist Workshop Manager/Mechanic Level 4.

**Required**

- Having valid driving license
- Should have vocational training certificate or 5 years of experience.

**Preferred**

- Applicants must be fluent in Tamil / English

All applications must be submitted to the below address no later than 31 May 2024 either by post or via email below. If there is a sufficient caliber of applicants, we reserve the right to close the role earlier than the date noted. Only successful applications will be contacted. For further information, please contact 021 228 5466. HALO encourages applicants from all backgrounds to apply for this role. We especially welcome applications from female candidates.

**HR Manager
The HALO Trust,
450 Thirunagar West, Kilinochchi
hr@halosrilanka.org**



# ஹைதராபாத்தை வீழ்த்தி கொல்கத்தா இறுதியில்!

**அஹமதாபாத், மே 22**

**ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற முதலாவது தகுதியாட்டத்தில், ஹைதராபாத்தை வீழ்த்தி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது கொல்கத்தா.**



ஹைதராபாத் மற்றும் கொல்கத்தா அணிகள் இந்த ஆட்டத்தில் பலப்பரீட்சை நடத்தின. முதலில் துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத் அணிக்கு ஆரம்ப வீரர் ஹெட் ஓட்டமெதையும் பெறாது ஆட்டமிழந்து ஏமாற்றினார். அபிஷேக் சர்மா 3 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்ப ஹைதராபாத் அணி தடுமாற ஆரம்பித்தது. ராகுல் திரிபாதி நிதானித்தாலும் மத்திய வரிசை வீரர்களான நிதீஸ் குமார் 9, சபாஸ் அஹமட் 0 என அடுத்தடுத்து ஆட்டமிழக்க 39 ஓட்டங்களில் 4 விக்கெட்களை இழந்தது ஹைதராபாத். ஆனால், திரிபாதியின் நிதானமும், கனகச்சிதமான ஆட்டமும் ஹைதராபாத் அணியை மீட்டெடுத்தது. அவருடன் ஹென்றிக் கிளாசன் இணைப்பாட்டம் அமைக்க பிறிதொரு விக்கெட்டை இழக்காமல் 100 ஓட்டங்களைக் கடந்தது ஹைதராபாத். அணி 101 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், கிளாசன் 32 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். எனினும், தனது அற்புதமான ஆட்டத்தைத் தொடர்ந்து அரைச்சதம் கடந்தார் திரிபாதி. 55 ஓட்டங்களில் திரிபாதி ரண் அவுட் முறையில் ஆட்டமிழந்தார். வந்த வேகத்தில் திரும்பினார் சன்வீர் சிங். பட் கம்மின்ஸ் இறுதிக் கட்டத்தில் பெற்றுக்கொடுத்த 30 ஓட்டங்கள் கைகொடுக்க, அனைத்து விக்கெட்களையும் இழந்து 159 ஓட்டங்களை ஹைதராபாத் பெற்றது.


பதிலுக்குக் களமிறங்கிய கொல்கத்தாவுக்கு, ஆரம்ப வீரர்களான குர்பராஸ் மற்றும் நரைன் இருவரும் வெற்றிக்குப் போதுமான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தனர். 23 ஓட்டங்களை குர்பராஸும், 21 ஓட்டங்களை நரைனும் பெற்று ஆட்டமிழந்தனர். அதன் பின்னர் களமிறங்கிய வெங்கடேஸ் ஐயர், மற்றும் ஸ்ரேயஸ் ஐயர் இருவரும் ஹைதராபாத்தின் பந்துவீச்சை நாலா பக்கமும் தெறிக்கவிட்டு ஆளுக்கொரு அரைச்சதம் கண்டனர். 28 பந்துகளில் வெங்கடேஸ் ஐயர் 51 ஓட்டங்களையும், 24 பந்துகளில் ஸ்ரேயஸ் ஐயர் 58 ஓட்டங்களையும் பெற எந்தப் பதற்றமும் இல்லாமல் 8 விக்கெட்களால் வென்று இறுதிக்குச் சென்றது கொல்கத்தா.

(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் • 15 • 09 • 1940



மறைவு • 21 • 05 • 2024

## ஆறுமுகம் சிவகுருநாதன் (சின்னட்டி ஐயா)

யாழ்.மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சிவகுருநாதன் (சின்னட்டி ஐயா) அவர்கள் நேற்று (21.05.2024) செவ்வாய்க்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லத்தம்பி (அப்பையா) - நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், நித்தியலட்சுமியின் (நித்தி) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தில்லைநாதன், செல்வநாதன் மற்றும் சிவமணி, சுந்தரலட்சுமி, லீலாவதி, செல்வநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிதம்பரநாதன் - புனிதசுந்தரி, காலஞ்சென்ற நாகராசா - விஜயலட்சுமி, யோகலட்சுமி, கமலம்மா, காலஞ்சென்றவர்களான அருமைநாயகம், அழகரத்தினம், சண்முகராசா மற்றும் வியாகரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், வேவி, வவி, கேமா (லண்டன்), ஜகுல் (கனடா), ஜகுலா (லண்டன்), குணதா (கொழும்பு), தஜன் (ஜேர்மன்), நிர்மலன் (லண்டன்), றாஜி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், மணியம், திலகன், காலஞ்சென்ற மதன் மற்றும் சுஜி, குமார், கோபி, சுஜானி, பிரியா, மயூரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், குயிந்தன் - வித்தியா (அவுஸ்திரேலியா), டயந்தி - கேவர்த்தனன் (லண்டன்), ஜஸ்மினா - கண்ணன், றதன் - கௌசி (ஜேர்மன்), ஜகீம் - பிரியா, சிந்து, கமில் (மலேசியா), காலஞ்சென்ற ஜக்சன் மற்றும் சம்ஜா (லண்டன்), விதுசா - கிசோ (லண்டன்), மதுசா (லண்டன்), மதுசன், மயூரி, மகிசன் (கனடா), கஜானன், கஜிதா (லண்டன்), திசா - லக்சன் (கனடா) கீர்த்திகன், திவ்வி (கொழும்பு), ஜவின், நவீன் (ஜேர்மன்), வெண்பா (லண்டன்), கேசிகா, அப்சரன், மிதுரன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், அபிசா, ஆதி, அபினாஷ், அஸ்விதா, சயனிகா, கிசோ, கவிஸ்னா, அபி, விகா, கயிலன் ஆகியோரின். அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.05.2024) வியாழக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மண்டைதீவு தலைக்கீரி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 960 4698**
**076 475 1346**
**077 157 7926**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 00551) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ரைசியின் மரணமும் இலங்கையும்

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் மரணம் சர்வதேச ரீதியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. ஒரு மாதத்துக்கு முன்னர் இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையே போர் மூண்டிருந்தநிலையில் - அந்தப் பிராந்தியத்தில் போர்ப் பதற்றம் நீடிக்கும் பின்னணியில் -ரைசி விபத்தொன்றில் உயிரிழந்திருக்கின்றமை பதற்றத்தை மேலும் அதிகரித்திருக்கின்றது . இப்ராஹிம் ரைசி பயணித்த உலங்குவானூர்தி விபத்தில் சிக்கிச் சிதைவடைந்திருக்கும் நிலையில், அவருடன் பயணித்த 9 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த விபத்துக்கு சீரற்ற காலநிலையே காரணம் என்று சொல்லப்படுகின்றபோதும், ரைசியின் மரணம் மர்மம் நிறைந்ததாகவே இருக்கின்றது. ரைசி அமெரிக்கா போன்ற மேற்கு நாடுகளுக்கும், இஸ்ரேல் போன்ற அமெரிக்க ஆதரவு நாடுகளுக்கும் பெரும் சவாலாக இருந்தார். ஏனைய முஸ்லிம் நாடுகள் மௌனம் காக்கும் நிலையில், துணிந்து பலஸ்தீனத்துக்கு ஆதரவாகக் குரல் கொடுத்ததுடன், பலஸ்தீனம் ஒரு தனிநாடு என்றும் அறிவித்திருந்த பின்னணியில், யாரும் எதிர்பாராத தருணத்தில் அவரது துர்மரணம் நிகழ்ந்திருக்கின்றது.

காலநிலைச் சீர்கேட்டால் ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி பயணித்த ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளானது என்று கூறப்பட்டாலும், பல சந்தேகங்கள் எழுந்திருக்கின்றன. மூன்று ஹெலிகொப்டர்கள் பயணித்தபோதும், ரைசி பயணித்த ஹெலிகொப்டரே விபத்துக்குள்ளானது, ஏனைய இரண்டும் பாதுகாப்பாகத் தரையிறங்கியிருக்கின்றன. எனவே ரைசியின் மரணத்துடன் இஸ்ரேல் மற்றும் ஏனைய இஸ்ரேல் ஆதரவு நாடுகளின் மறைகரங்கள் இருக்கலாம் என்ற தகவல்களும் வெளியாகியிருக்கின்றன. அதற்கான சாத்தியங்கள் அதிகமாகவே உண்டு. கடந்த காலங்களிலும் இவ்வாறான சம்பவங்கள் நடந்திருக்கின்றன. குறிப்பாக இஸ்ரேல் தன் எதிரிகளை இவ்வாறான மர்ம விபத்துகளை உண்டாக்கி தீர்த்துக்கட்டிய சம்பவங்கள் வரலாற்றில் நிறையவே உண்டு. இப்ராஹிம் ரைசியின் மரணத்தை அடுத்து இலங்கை அரசாங்கமும் ஒரு நாள் துக்க தினத்தை அறிவித்திருக்கின்றது. நீண்டகாலமாக ஈரானுடன் நல்லுறவைப் பேணும் நாடான இலங்கை - ஈரான் மக்களின் துயரில் பங்கெடுத்துக்கொள்வதில் எவரும் குற்றங்கண்டுவிட முடியாது. மறைந்த இப்ராஹிம் ரைசி இலங்கையுடன் - தற்போதைய ஜனாதிபதி ரணிலுடன் அதிக நெருக்கத்தைக் கொண்டிருந்த ஒருவர். அண்மையில் இலங்கை வந்திருந்த ரைசி, ஈரானின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட உமா ஓயாத் திட்டத்தை மக்களிடம் கையளித்திருந்தார். இலங்கைக்கு மேலும் பல உதவித் திட்டங்களை வழங்கவும் உறுதி தெரிவித்திருந்தார். அமெரிக்க மற்றும் மேற்குலக நாடுகளுக்கு எதிரான போக்கைக் கொண்ட ரைசியின் இலங்கை வருகைக்கு அமெரிக்கா போன்ற நாடுகள் நேரடியாகவே எதிர்ப்புத் தெரிவித்திருந்தன. ஈரானுடன் உறவுகளை வைத்திருக்கும் நாடுகள் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும் என்ற எச்சரிக்கையும் அமெரிக்காவிலிருந்து வெளியாகியிருந்தது. ஆனால் இலங்கை அவற்றை எல்லாம் மீறி ஈரான் ஜனாதிபதியை வரவேற்றிருந்தது.

இலங்கை தனது நீண்டகாலப் பங்காளிகளுடன் உறவு கொண்டாடுவது எவ்விதத்திலும் பிழையானது அல்ல. ஆனால் தற்போதைய உலக ஒழுங்குகளையும் இலங்கை கவனத்தில் கொள்ளவேண்டும். பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கி அனைத்து நாடுகளிடமும் கையேந்தி நிற்கும் இலங்கை, தேவையற்ற இடியப்பச் சிக்கல்களுக்குள் சிக்கிக்கொள்வது புத்திசாலித்தனம் அல்ல. ரைசியின் மறைவு உணர்த்தும் செய்தியை புரிந்துகொண்டு - அணிசேராக் கொள்கையை செயற்பாட்டிலும் கொண்டிருப்பதே இலங்கைக்கு எப்போதும் நன்மையைத் தரும்.




# ரணிலின் அறிவிப்பு அடுத்தமாதம் வரும்

### மனுஷ நாணயக்கார தெரிவிப்பு

**கொழும்பு, மே 22**
**ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தியோகபூர்வமாக அடுத்த மாதம் அறிவிப்பார் என அமைச்சர் மனுஷ நாணயக்கார நேற்றுத் தெரிவித்தார்.**

இந்த ஆண்டு நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடமாட்டார் என்று ஐக்கிய மக்கள் சக்தி உட்பட பல தரப்புகளால் ஒரு கதை பரப்பப்படுகிறது.
விக்கிரமசிங்க, அத்தகைய விடயத்தை முன்வைக்கும் அனைவருக்கும் ஓர் அடியை வழங்குவார், ஏனெனில் அவர் மற்றொரு பதவிக் காலத்தைக் கோருவார். அடுத்த மாதம் அவர் தனது வேட்புமனுவை உத்தியோகபூர்வமாக அறிவிப்பார் என அமைச்சர் நாணயக்கார ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார். நாட்டின் நலனுக்காக கடினமான நேரத்தில் ஜனாதிபதிப் பதவியை ஏற்றுக்கொண்டதன் மூலம் விக்கிரமசிங்க தனது திறமையை நிரூபித்துள்ளார். விக்கிரமசிங்க தனியொரு கட்சியில் போட்டியிடமாட்டார். ஜனாதிபதித் தேர்தலில் பல சக்திகளைப் பிரதிநிதித்துவப் படுத்துவார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## இந்தோனேஷிய ஜனாதிபதியை சந்தித்த ரணில்

இந்தோனேஷியாவில் நடைபெறும் உலக நீர் மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தோனேஷிய ஜனாதிபதி ஜோகோ விடோடோவுடன் கலந்துரையாடியுள்ளார்.
இலங்கைக்கும் இந்தோனேஷியாவுக்கும் இடையிலான வரலாற்று உறவுகளை மேலும் பலப்படுத்த இரு நாட்டுத் தலைவர்களும் இணக்கம் தெரிவித்துள்ளனர். (எ-இ)

## விசாரணைக்குள் சிறைக்காவலர்கள்

கொழும்பு, மே 22
சுகவீன விடுமுறையில் பணிக்குச் சமுகமளிக்காத சிறைக்காவலர்கள் குழு தொடர்பில் ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது என்று சிறைச்சாலை ஊடகப்பேச்சாளர், சிறைச்சாலை ஆணையாளர் (புனர்வாழ்வு) காமினி பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (எ-இ)



## இரு சட்டங்கள் நாடாளுமன்றில்

கொழும்பு, மே 22
நாட்டின் பொருளாதாரத்துக்கு மிக அவசியமான இரு சட்டங்கள் இன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்று பதில் நீதியமைச்சர் தெரிவித்துள்ளார். பொருளாதார பரிமாற்ற சட்டவரைவு, அரச நிதி முகாமைத்துவ சட்டவரைவு என்பனவே சமர்ப்பிக்கப்படவுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## மதுபான நிறுவனங்கள் வரி ஏய்ப்பு

கொழும்பு, மே 22
மதுபான நிறுவனங்கள் 700 கோடி வரி செலுத்தத் தவறியுள்ளன என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். அவை முறையாக வரி செலுத்தத் தவறியுள்ளன என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். (எ-இ)

## நாளை

23.05.2024
வியாழக்கிழமை
வைகாசி - 10
சுபநேரம் : 07.22 - 08.52
ராகுகாலம் : 01.22 - 02.52

வைசாக் பண்டிகை

## நாளொரு நல்வார்த்தை

**உங்கள் உணர்வுகளை விட வலுவாக இருக்க உங்கள் மனதை நீங்கள் பயிற்றுவிக்கவேண்டும். இல்லையெனில் நீங்கள் உங்களை இழந்துவிடுவீர்கள்.**

**- மைக் டைசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவித்தல்

**அதிர்ஸ்ட இலாபச்சீட்டு அதிர்ஸ்டம் பார்க்கப்படும் காலம் பிற்போடப்பட்டுள்ளது.**

கடந்த 20.05.2024 அன்றைய தினம் தவிர்க்கமுடியாத காரணத்தினால் நடத்தப்படவில்லை எனவே வருகின்ற தீபாவளியை முன்னிட்டு ஒக்ரோபர் மாதம் 31ம் திகதி கிளிநொச்சி சந்தை முன்பாக (கனகபுரம் வீதி) காலை 10.00 மணியளவில் நடாத்தப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

(CS 2869) V-1




# திஸ்ஸ விகாரைக்கு எதிராகப் போராட்டம்

யாழ்ப்பாணம், மே 22

தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு எதிரான போராட்டம் முதலாவது ஆண்டைப் பூர்த்தி செய்துள்ள நிலையில், இதை முன்னிட்டு இன்று முதல் மூன்று நாள்களுக்கு கவனவீர்ப்பு இடம்பெறவுள்ளது. இன்று புதன்கிழமை மாலை 4.30 மணியளவில் தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு அருகில் ஆரம்பிக்கவுள்ள காணி விடுவிப்புப் போராட்டம், நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை இரவு 7 மணி வரை தொடரவுள்ளது. எனவே, பொது மக்கள், கட்சி உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவரையும் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் கேட்டுள்ளார். (ம-66)

# பொருளாதாரப் போரை வெல்பவரே வேட்பாளர்!

## பெரமுன அறிவிப்பு

கொழும்பு, மே 22

போரை மஹிந்த ராஜபக்ச முடிவுக்கு கொண்டுவந்ததுபோல, பொருளாதாரப் போரை வெற்றிகொள்ளக்கூடிய ஒருவரையே ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்குவோம் என்று பொதுஜன பெரமுன வின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'பொதுஜன பெரமுன இதுவரை எந்தவொரு தேர்தலிலும் தோற்றது கிடையாது. ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்க கட்சி சார்பில் சில வேட்பாளர்கள் தயார் நிலையிலேயே உள்ளனர். உரிய நேரம்வரும்போது வெற்றிவேட்பாளரைக் களமிறக்கி ஜனாதிபதித் தேர்தலிலும் வெற்றி நடைபோடுவோம். ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் கருத்துக் கூறுவதில் இருந்து விலகி இருப்பது என்று கட்சி தீர்மானித்துள்ளது. எனவே, தற்போதைய சூழ்நிலையில் வேட்பாளர் பெயரை, கட்சி முடிவை மீறி அறிவிக்கமுடியாது.

மஹிந்த ராஜபக்ச பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தியவர். தேசிய உற்பத்தியையும் அதிகரிக்கச் செய்தார். அப்போது தம்மிக்க பெரேரா மஹிந்த ராஜபக்சவின் செயலாளராகவும், முதலீட்டுச் சபையின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

நாட்டை மீட்கக்கூடிய தலைவராகவே மஹிந்த ராஜபக்சவை அன்று மக்கள் தெரிவுசெய்தனர். அவர் மக்கள் எதிர்பார்ப்பை நிறைவேற்றினார். போரை முடிவுக்கு கொண்டுவந்தார். அதேபோல பொருளாதாரப்போரை வெற்றிகொண்டு, நாட்டை மீட்கக்கூடிய வேட்பாளர் ஒருவரை நாம் நிறுத்துவோம்' - என்றார். (அ-ம-44)

# சாப்பாடு சரியில்லை

## எம்.பி.க்கள் குற்றச்சாட்டு

நாடாளுமன்ற சிற்றுண்டிச்சாலையில் தமக்கு வழங்கப்படும் உணவு தரமற்றதாக உள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு குற்றஞ்சுமத்தியுள்ளது.

சபைக் குழுக் கூட்டத்தின்போது சபாநாயகரிடம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதனைச் சுட்டிக்காட்டினர்.

உணவுக்காக அறிவிடப்படும்தொகைக்கு நியாயமான உணவை வழங்கவேண்டும். ஏறக்குறைய இருபது நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏற்கனவே சாப்பிடுவதைத் தவிர்த்து வருகின்றனர்.

நாடாளுமன்றத்தின் வருடாந்த உணவுச் செலவு சுமார் 12 கோடி ரூபாவாகும், அதில் பெரும்பாலானவை நாடாளுமன்ற ஊழியர்களின் உணவுக்காகவே செலவிடப்படுகின்றன என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ச-இ)

# கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

### மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை (PSDG) 2024

01. வலிகாமம் கிழக்கு பிரதேச சபையானது மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை (PSDG) - 2024 கொண்டு கீழ்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கு பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

02. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர், சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 01.03.2024 ஆம் திகதிய 01/2024 ஆம் இலக்க பொது அரச நிதி சுற்றறிக்கைக்கு அமைவாகவும் கேள்வி கோரப்படுகின்றது கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், கீழுள்ள அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டுமான துறையில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05. பெறுமதிசேர்வரி (VAT) பதிவினைக் கொண்டவர்கள் கேள்விகள் சமர்ப்பிக்கப்படும்போது பெறுமதிசேர்வரி (VAT) சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டுமே சபையினால் பெறுமதிசேர்வரி (VAT) கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர். (தொலைபேசி இல: - 021-205 8867)** அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09:00 மணிமுதல் மாலை 15:00 மணிவரை 2024.05.22 ஆம் திகதியில் இருந்து 2024.06.06 ஆம் திகதி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.** அவர்களிடமிருந்து 2024.05.22 ஆம் திகதியிலிருந்து 2024.06.06 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் காலை 09:00 மணி தொடக்கம் 15:00 மணிக்கும், இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 3000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

08. கேள்வியினை இரு பிரதிகளில் தயாரித்து இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் மற்றும் மூலப்பிரதி, இணைப்பிரதி என்பவற்றைக் குறிப்பிட்டு தனித்தனி கடித உறைகளில் இட்டு **தலைவர் பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர், யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு 2024.06.07 ஆம் திகதி மு.ப 10:00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக, அனுப்பிவைக்கப்பட வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09. கேள்வி, கேள்விப்பிணை செல்லுபடியாகும் காலம், கேள்வி பிணை வைப்புத் தொகை என்பன கீழே அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளது

10. கேள்வி கோரல் பற்றிய முன் கேள்வி கூட்டம் வலிகிழக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் 2024.05.29 ஆம் திகதி மு.ப.10:30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பிட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(13)/4/PSDG /2024/01 | மயான வீதி புனரமைப்பு, வாதரவத்தை | 8.47 | 90 நாட்கள் | C7 அல்லது C6 | 77 நாட்கள் | 85,000.00 | 2024.09.20 |

**தலைவர்,**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.**
**2024.05.22**

(cr.42482) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வரலாற்றுச் சிறப்புமிக்க முல்லைத்தீவு வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த வைகாசிப் பொங்கல் உற்சவம் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிலையில், பக்தர்கள் தங்கள் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர். (எ-66)






# வரும் வாரத்தில் டெங்கு தடுப்பு

கொழும்பு, மே 22

டெங்கின் தாக்கம் மீளவும் அதிகரித்துள்ள நிலையில் எதிர்வரும் 26ஆம் திகதி முதல் தேசிய டெங்குத் தடுப்பு வாரம் அறிவிக்கப்படவுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பெய்துவரும் பருவ மழையால் எதிர்காலத்தில் டெங்கு நுளம்புகள் பெருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதுவரை 23,000 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)

# ரைசி மறைவுக்கு மஹிந்த இரங்கல்

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் மறைவுக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தனது இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள இரங்கல் பதிவில், ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் மறைவுக்கு ஈரான் நாட்டு மக்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கல்கள். அவரது நாட்டுக்கான சேவை மற்றும் அர்ப்பணிப்பு மரபு என்றென்றும் நினைவுகூரப்படட்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# 15,667 இராணுவத்தினரை விலக்குவதற்கு முடிவு

கொழும்பு, மே 22

பொது மன்னிப்புக் காலத்தின் முடிவில் விடுமுறையின்றி கடமைக்கு சமுகமளிக்காத 15 ஆயிரத்து 667 இராணுவத்தினர் சட்ட ரீதியாக வெளியேற்றப்படவுள்ளனர் என்று இலங்கை இராணுவத் தலைமையகத்தால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறையான விடுமுறையின்றி கடமைக்குச் சமுகமளிக்காத இலங்கை இராணுவத்தின் உறுப்பினர்களுக்கு 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி முதல் 2024 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் திகதி வரை சட்ட ரீதியாக சேவையை விட்டு வெளியேறுவதற்காக ஒரு மாத கால பொது மன்னிப்புக் காலம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

பிரகடனப்படுத்தப்பட்டிருந்த பொது மன்னிப்புக் காலத்தின் 2023 டிசெம்பர் 31 மற்றும் அதற்கு முன் விடுமுறை இன்றி பணிக்குச் சமுகமளிக்காத இராணுவத்தினரை சட்ட ரீதியாக சேவையில் இருந்து விலகுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் அனுமதி இன்றி கடமைக்குச் சமுகமளிக்காமல் தற்போது வெளிநாட்டில் இருக்கும் இராணுவத்தைச் சேர்ந்த 373 பேர் இராணுவத்தை விட்டு வெளியேறுவதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று இராணுவத் தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# 'அசிட்' தாக்குதல் பெண் உயிரிழப்பு

கொழும்பு, மே 22


பெண் ஒருவர் தனது வீட்டின் சமையலறையில் சமைத்துக்கொண்டிருந்தபோது வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த நபரொருவர் வீசிய அசிட் தாக்குதலில் குறித்த பெண் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அம்பலாங்கொட பிரதேசத்தில் இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடந்துள்ளது.

59 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பலாங்கொட பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கலைத்துறை மாணவர்களுக்கு கதவடைக்கும்

# பல்கலைக்கழக கற்கைநெறிகள்


இ.சர்வேஸ்வரா
விரிவுரையாளர்
கல்வியியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


2023-2024 கல்வியாண்டு தொடக்கம், முன்னர் கலைத்துறை மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்ட நான்கு கற்கைநெறிகளுக்கு முற்றாக விண்ணப்பிக்க முடியாதவகையில் அனுமதித் தேவைப்பாடுகள் மறுசீரமைக்கப்பட்டுள்ளன. இந்தக் கற்கைநெறிகளுக்கான மொத்த அனுமதிகளின் எண்ணிக்கை 483 ஆகும். அத்துடன் முன்னர் விண்ணப்பிக்கக் கூடியதாகவிருந்த இரண்டு கற்கைநெறிகளுக்கு கலைத்துறை மாணவர்கள் 2023ஃ2024 கல்வியாண்டுக்குப் பின்னர் விண்ணப்பிப்பதாயின் கட்டாயமாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்தை உயர்தரத்தில் தெரிவு செய்யவேண்டியுள்ளது. இந்தத் துறைகளுக்கான மாணவர் அனுமதி 635 ஆகும். அது போன்று வேறு மூன்று கற்கைநெறிகளுக்கு அனுமதி பெறுவதற்கான அடிப்படைத்தகமைகளில் உயர்தர கலைத்துறை பாடத்தேர்வுகளின் சேர்மானங்களில் முன்னர் இருந்த தன்மையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அதாவது பாடத்தெரிவுகளின் தன்மைகள் மேலும் குறுக்கப்பட்டுள்ளன. இந்த மூன்று கற்கைநெறிகளுக்கும் அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 357 ஆகும். 2023ஃ2024 கல்வியாண்டுக்கு முன்னர் கலைத்துறை மாணவர்கள் பொதுவாக விண்ணப்பிக்கத்தக்கதாகவிருந்த ஒன்பது கற்கைநெறிகளின் அனுமதித் தேவைப்பாடுகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. இந்தக் கற்கைநெறிகளுக்கான மொத்த மாணவர் உட்சேர்க்கை ஆயிரத்து 375. இதற்கு முன்னைய கல்வியாண்டிலும் குறித்த இரண்டு கற்கைநெறிகளுக்கு கலைத்துறை மாணவர்கள் விண்ணப்பிக்கத்தக்கதாகவிருந்த நிலைமை மாற்றியமைக்கப்பட்டு கலைத்துறை மாணவர்கள் விண்ணப்பிக்கமுடியாது செய்யப்பட்டது. அவ்விரு துறைகளுக்குமான அனுமதிகளின் எண்ணிக்கை 173 ஆகும். இவற்றின் அடிப்படையில் ஆயிரத்து 548 மாணவர் எண்ணிக்கையை கொண்ட பதினொரு துறைகளுக்கு விண்ணப்பிக்கும் வாய்ப்பை கலைத்துறை மாணவர்கள் அடுத்துவந்த இரண்டு கல்வியாண்டுக்குள் இழந்துள்ளனர். இந்த நிலைமை அடுத்துவரும் ஆண்டுகளில் மேலும் தீவிரமடைய வாய்ப்புண்டு. எனவே இது மிகவும் உன்னிப்பாக கவனம் எடுக்கப்படவேண்டிய விடயமாகும்.

## அறிமுகம்

இலங்கையின் கல்விமுறைமையைப் பொறுத்தவரையில் அரச பல்கலைக்கழகமொன்றுக்கு அனுமதி பெறுவது என்பது பல்வேறுவகைகளிலும் முக்கியமானதொன்றாகக் கருதப்படுகின்றது. குறிப்பாக உயர்கல்வியை நிறைவு செய்தபின்னர் நிரந்தர வேலையொன்றைப் பெற்றுக்கொள்வது அல்லது மேற்படிப்புகளை மேற்கொள்வது மற்றும் சமூக அந்தஸ்தை தக்கவைப்பது போன்ற உள்ளிட்ட பல வகைகளில் பல்கலைக்கழகப் பட்டம் அவசியத் தேவையாகின்றது. குறிப்பாக நிலைபேண் தன்மைமிக்க தொழில்வாய்ப்பொன்றைப் பெற்றுக்கொள்ள பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு அவசியமானதாகின்றது. அதே வேளை அரசாங்கப் பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறும் பட்டதாரிகள் பலர் அரசாங்கமே தமக்கான வேலையையும் தரவேண்டும் என எதிர்பார்க்கின்றார்கள். இந்த எதிர்பார்ப்பு நியாயமானதாக இல்லாவிட்டாலும் அதனைப் பூர்த்தி செய்யவேண்டும் என்பதற்காக அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கின்றது. அத்தகைய நடவடிக்கைகளுள் ஒன்றாக க.பொ.த. உயர்தரத்தில் கற்கும் துறைகளின் அடிப்படையில் வழங்கப்படும் பல்கலைக்கழக அனுமதிகளுக்கு அப்பால்; குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான கற்கைநெறிகளுக்கு சகல துறைகளிலும் கல்வி கற்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கக்கூடியதாகவுள்ளது. இவ்வாறான கற்கைநெறிகளின் எண்ணிக்கை ஐம்பதை அண்மித்துள்ளது.

அதிலும் குறிப்பாக கலைத்துறையில் கல்வி பயிலும் மாணவர்கள் தொழில்சந்தையின் கேள்வி கருதி கலைத்துறைக்கு நேரடியாக வழங்கப்படும் வாய்ப்புகளைவிட வேறு கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்கும் வாய்ப்புகள் ஒப்பீட்டளவில் அதிகமாகவுள்ளன. கலைத்துறை மாணவர்களைப் பொறுத்தவரையில் பல்கலைக்கழகத்தில் பயிலும் பட்டப்படிப்பின் தன்மை அவர்கள் விரைவாக ஒரு வேலையைப் பெற்றுக்கொள்வதில் அதிக செல்வாக்குச் செலுத்துவதாகவுள்ளது. தொழில் சந்தையில் அதிக கேள்வியுள்ள கற்கைகளைப் பயில்வது கலைத்துறை பட்டதாரிகளின் வேலையின்மைப் பிரச்சினையை இழிவளவாக்கவும் உதவுகின்றது. இதனால் கலைத்துறையில் கற்கின்ற மாணவர்கள் உரிய வழிகாட்டுதல்களின் அடிப்படையில் தமது துறைக்கான தனித்துவமான கற்கைகளைத் தவிர்த்து விசேடமான கற்கைகளுக்கு விண்ணப்பிக்கும் தன்மை கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்திருந்தது.

இந்த நிலையில் 2021ஆம் ஆண்டிலிருந்து முன்னர் கலைத்துறை மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையதாகவிருந்த சில கற்கைநெறிகளின் அனுமதித் தேவைப்பாடுகள் மீள் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றமையை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வெளியிடும் பல்கலைக்கழக அனுமதிக்கான கைநூல் மூலம் அறியமுடிகின்றது. இவ் மீள்பரிசீலனைகள் குறித்த பல்கலைக்கழகங்களினாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த கால சில அனுபவங்களின் அடிப்படையில் கற்கைநெறித் தேவைப்பாடுகளில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

## கலைத்துறையும் பல்கலைக்கழக அனுமதியும்

இலங்கையில் க.பொ.த. உயர்தரத்தில் அதிகளவான மாணவர்கள் கலைத்துறையைத் தெரிவு செய்கின்றார்கள் என்பது ஒரு சவாலான விடயமாகும். உயிரியல், பௌதிக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்துறைகளைத் தெரிவுசெய்யும் மாணவர்களின் எண்ணிக்கை என்பது கலைத்துறையுடன் ஒப்பிடும்போதும் மிகக் குறைவாகவேயுள்ளது. கல்விக் கொள்கை வகுப்பாளர் மட்டத்தில் அதிகம் கவனம் கொள்ளப்படும் பிரச்சினையாக இது உள்ளது. கலைத்துறையைத் தெரிவு செய்யும் மாணவர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த பல்வேறு உபாயங்கள் வகுக்கப்பட்ட வண்ணமுள்ளன. க.பொ.த.உயர்தரத்தில் தொழில்நுட்பத்துறை அறிமுகப்படுத்தப்பட்டமை இத்தகைய பிரதான உபாயமாகவிருந்தபோதும் அது அவ்வளவு தூரம் பயன்கொடுக்கவில்லை. அத்துடன் பல்கலைக்கழக கற்கைநெறிகளின் தன்மையில் கலைத்துறை மாணவர்களை விஞ்ஞானம் சார்ந்த துறைகளுக்கு அல்லது தொழில் சந்தை வாய்ப்பு அதிகமாகவுள்ள துறைகளுக்கு மடைமாற்றம் செய்யும் நுட்பமும் இன்று வரை கைக்கொள்ளப்படுகின்றது. கலைத்துறை மாணவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கத்தக்கதாகவுள்ள 11 கற்கைநெறிகளுக்கு மேலதிகமாக பொதுவான நிலையில் விண்ணப்பிக்கத்தக்க 34 கற்கைநெறிகள் கலைத்துறை மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இந்த 34 கற்கைநெறிகளும் பின்வரும் ஆகக்குறைந்த அனுமதித் தேவைகளுள் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்டவையை கொண்டுள்ளன.

1. க.பொ.த. உயர்தரத்தில் ஏதேனும் துறைகளில் மூன்று பாடங்களில் சித்தி.
2. பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பிப்பதற்கான ஆகக்குறைந்த தகமை.
3. க.பொ.த. உயர்தரத்தில் தெரிவுசெய்யும் பாடச்சேர்மானங்கள்.
4. க.பொ.த. சாதாரணதரத்தில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் குறித்த பெறுபேறு.
5. பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் உளச்சார்புப் பரீட்சையில் சித்தி.

மேற்குறித்த அனுமதித்தகமைகளுக்குள் செய்யப்பட்டு வரும் உப மாற்றங்களின் காரணமாகவே கலைத்துறை மாணவர்கள் விண்ணப்பிக்கத்தக்கதாகவிருந்த 11 கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்கும் வாய்ப்பை அந்தத் துறை சார்ந்த மாணவர்கள் கடந்த இரண்டு வருடங்களுக்குள் இழந்துள்ளனர். இருந்தும் இந்தக் கற்கைகளுள் இரண்டு கற்கைநெறிகளுக்கு அனுமதிப்பதற்கான பாடச்சேர்மானங்களில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ள போதும் அவை இன்னும் கலைத்துறை மாணவர்கள் விண்ணப்பிக்கத்தக்கதாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. கலைத்துறை மாணவர்களுக்கான பல்கலைக்கழக அனுமதிகளின் எண்ணிக்கை இழப்பு அல்லது குறைப்பு எனும் விடயத்தில் ஆரம்பகட்ட விழிப்பை ஏற்படுத்துவது மிகவும் அவசியமானது.


(மிகுதி அடுத்த வாரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நி.பிரதிகா




# சமூக வலைத்தளங்களின் எழுச்சியும் ஆபத்தம்சமும்

காற்றிலே கரைந்து நம் உயிர் மூச்சாய் கலந்து எங்கும் பரந்து விரிந்து தனது பரிணாம வளர்ச்சியை ஸ்தாபித்துக் கொண்டுள்ளன இன்றைய சமூக ஊடகங்கள். உலகம் நம் உள்ளங்கைகளிலே சுருங்கிவிட்டது. நாம் ஒவ்வொருவரும் தொலைபேசிக்குள்ளே நம்மைத் தொலைத்துவிட்டு, வெளியிலே வெறும் விம்பங்களாகத் திரிகின்றோம். உலகளாவிய தன்மைகொண்ட அனைத்து மக்களையும் அருகாமையில் உணரவைக்கும் ஓர் இணைப்பே சமூக வலைத்தளங்களாகும். இது ஒரு தனிப்பட்ட அமைப்பல்ல மாறாக ஒன்றோடு ஒன்று நெருக்கமுறப் பின்னப்பட்டது. வாட்ஸ்அப், பேஸ்புக், டுவிட்டர், டிக்டொக், இன்ஸ்டகிராம், யூடிப் என இதன் பட்டியல் நீட்சியானது.
விஞ்ஞானம் வளர்ச்சியடையாத காலகட்டத்தில் நம் முன்னோர்கள் தகவல்களை இன்னொருவருக்கு தெரியப்படுத்துவதற்கு புறாக்களைத் தூது அனுப்பினர். பின்னர் கடிதங்கள் அறிமுகமாகின. காலப்போக்கில் விஞ்ஞானத்தில் புதுப் புரட்சியை ஏற்படுத்தும் வகையில் பல விஞ்ஞானிகள் தோன்றினர். அதன் விளைவாக தொலைபேசி, கணினி போன்றன கண்டுபிடிக்கப்பட்டன. நவீன வளர்ச்சியை நோக்கிய மனிதனின் பயணத்தில் மேலும் புதிய வசதிகளுடன் அவை திரிபுபடுத்தப்பட்டன. இன்று அவற்றின் வளர்ச்சி நாம் கற்பனைசெய்தும் பார்க்கமுடியாதளவிலுள்ளன. சமூக ஊடகங்களினூடாக உலகில் நடைபெறும் பல்வேறு செய்திகளையும், தகவல்களையும் மக்களுக்கு கொண்டுசேர்க்கமுடிகின்றது. இணையவழி கற்றலுக்கும், வேலைத்தளங்களிலே வேலைகளை இலகுவாக்குவதற்கும் அவை உதவுகின்றன.
திறமைகளுக்கும், கலைகளுக்கும் தளமாக அமைகின்றன. சமூகத்தில் நடக்கும் பிரச்சினைகளையும், வன்முறைகளையும் வெளிச்சத்துக்குக் கொண்டுவரக் கூடியதாகவுள்ளன. கடல் கடந்தும் நட்பை உருவாக்கிக்கொள்வதோடு தூர நாட்டிலுள்ள உறவினருடன் உறவாடவும் முடிகின்றது. இவ்வாறான பல நல்ல விடயங்கள் வலைத்தளங்களில் இருப்பினும், தீய வழியிலும் அவை தாக்கத்தை ஏற்படுத்தவே செய்கின்றன.

### திணிக்கப்படும் தீதுக்கள்

ஊடகங்களிலே கருத்துச் சுதந்திரம் என்பது பாராட்டத்தக்க விடயமே. ஆனாலும் இன்னொரு நபர் மீதான கருத்துகள் எந்தளவுக்குத் திணிக்கப்படவேண்டும் என்ற எல்லையொன்றுள்ளது. தனிப்பட்ட நபருக்கெதிரான கருத்துகள், அவர் சம்பந்தப்பட்ட வீடியோக்களை சமூக வலைத்தளங்களிலே பகிர்வதன் மூலம் குறித்த நபர் உளரீதியான பாதிப்பைச் சந்திக்கிறார். ஒருவரை தற்கொலைக்குத் தூண்டும் வகையிலான கருத்துகளைப் பதிவேற்றுவது ஏற்றுக்கொள்ளமுடியாததாகும்.
இன்றைய சமூக ஊடகங்களில் ஒரு சட்டசபையே நடைபெறுகின்றது எனலாம். அதில் அனைவருமே நீதிவான்களாயிருப்பது வேடிக்கையே. ஆடலும் பாடலும் நாம் ஆலயத்திருவிழாக்களிலே பார்த்திருப்போம். ஆனால் இன்று சமூக வலைத்தளங்களில் சிலர் அரைகுறை ஆடைகளுடன் தமது ஆடலும் பாடலும் நிகழ்ச்சிகளை அரங்கேற்றம் செய்கின்றனர்.
இன்றைய இளைஞர், யுவதிகள் தம்மை தற்பெருமை மிக்கவர்களாக உருவாக்கிகொள்வது சமூக ஊடகங்களில்தான். தம் நிலைக்கு மீறிய இயல்பு வாழ்க்கைக்கு புறம்பான ஒரு பெருமையை, உலகுக்கு காண்பிக்கும் வகையில் தகவல்கள் பகிரப்படுகின்றன. அவ்வாறு நாம் வெளிவிடும் தகவல்களைப் பயன்படுத்தி பல மோசடிகள் நடைபெறக்கூடும்.
தற்போது, அரசியல் மற்றும் இனவெறிகளைத் தீர்த்துக்கொள்ளும் களமாகக்கூட சமூக வலைத்தளங்கள் மாறிவிட்டன. உண்மையில் இவை நம்மை மனநோயாளிகளாக்குகின்றன. உலகளவில் 150 கோடிக்கும் மேற்பட்டோர் இன்று சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துகின்றனர். இவர்களில் அனேகமானவர்கள் இளைஞர்கள். 1 நொடிக்கு 12 புதியவர்கள் வலைத்தளங்களில் நுழைகின்றனர் என்கின்றது ஆய்வு. இந்தப் பயன்பாட்டாளர்களின் பசிக்குத் தீனிபோடுவது வலைத்தளங்களின் புதிய வசதிகளாகும்.
ஒவ்வொருவரும் தம் தனிப்பட்ட கடமைகளை பொருட்படுத்தாமல் இவற்றிலே மூழ்கியிருப்பது துன்பத்தையே ஏற்படுத்தும். அவற்றிலிருந்து சற்று வெளிவந்து உலகை உற்று நோக்குவதன் மூலம் ஏற்படும் குற்றங்களை குறைக்கமுடியும். வலைத்தளங்களின் நன்மை, தீமைகளைக் கண்டறிந்து பாதுகாப்போடு அவற்றைப் பயன்படுத்தவேண்டும். குறிப்பாக பெண்கள் புத்திசாலித்தனமாகவும், விழிப்போடும் இருப்பது நன்று.




சௌந்தரி

# ஆசி கந்தராஜாவின் சைவமுட்டை

தமிழ் எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்கவராக விளங்கும் ஆசி கந்தராஜா, அறிவியல் புனைகதைகளில் மிகவும் தேர்ச்சிபெற்றவர். இவரின் கதைசொல்லும் பாணி பிற தமிழ் எழுத்தாளர்களிடமிருந்து முற்றிலும் வேறுபட்டது.
இவரின் சைவமுட்டை என்னும் அறிவியல் புனைகதை நூலை, ஜீவநதி பதிப்பகம் சமீபத்தில் வெளியிட்டுள்ளது. இந்த நூலில் பதினாறு உட்தலைப்புகளைக் கொண்ட கதைகள் உள்ளன. ஒவ்வொரு கதையும் வெவ்வேறு கருப்பொருளையும் வெவ்வேறு கதாபாத்திரங்களையும் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளன. கதாசிரியரின் பட்டறிவு, கதையை நகர்த்த உரையாடலைப் பயன்படுத்தும் விதம், கதையிலுள்ள அறிவியலை விவரிக்கும் எளிமையான எழுத்து நடை போன்றவை இந்நூலின் தனித்துவத்தை வெளிப்படுத்துகின்றன.
எவ்விதமான மிகைப்படுத்தலுமின்றி அறிவியலுடன் பின்னிப் பிணைந்திருக்கும் அன்றாட வாழ்க்கையின் யதார்த்தத்தை சாதாரண மக்களை கதைமாந்தராக்கிச் சொல்லும் இத்தொகுப்பின் வாசிப்புப் பயணம், ஆரம்பத்திலிருந்து இறுதிவரை வாசகர்களை மகிழ்விக்கும். தவறான அறிவும், செய்திகளும் மனிதரிடம் சேராது தடுப்பது சமூகக் கடமையென்றெண்ணி தனது எழுத்தினூடாக சரியானதை வெளிப்படுத்தியுள்ள ஆசிரியரது மனிதத்துவம் மீதான காதலும், சமூகத்தின் மீதான அக்கறையும் பாராட்டத்தக்கது. மனிதர்களின் ஆளுமையே அவர்களது எழுத்தில் வருவது. எல்லையற்ற தேடலுடன் தனது எழுத்தை ஆளும் நூலாசிரியரின் படைப்பூக்கம் இன்னும் பல வாழ்க்கை அனுபவங்களை வாசகர்களுக்குப் பெற்றுத்தரட்டும்.


# நிறப்பிரிகை

வற்றிப்போன குளத்தில்
மீந்திருக்கலாம்
செதில்களாலும் முட்களாலும்
பின்னப்பட்டிருந்தது எனக்கான ஒப்பனை
உரிந்து போட முடியாமல்
முகத்தில் ஒட்டியிருந்தது.

சுழியோடிப்போன குஞ்சு மீன்களை
அருவி புறந்தள்ள
நிறங்களின் பெயர்களை
மாற்றிக்கொண்டேன்

ஊதா நிறத்து நிலவின் ஒளியில்,
பாறைகளில் எனது பெயரை வரைந்தேன்

எங்கிருந்தோ வயோதிபக்கரடி ஒன்றின்
உரோமங்கள் வந்து என்முதுகில்
ஒட்டிக்கொண்டன
கடந்து போகிற காற்றின் துளிகளில்
பட்டுத்தெறிக்கிறது விகாரம்
என் கையில் இருக்கும் வீணையின் இறுகிய
நரம்புகள்
வேறொருவனின் இசையை மீட்ட
ஒப்பவேயில்லை
எனது சுவாசத்தை
திருடிக்கொண்டு
வைக்கோற் போருக்குள்
பதுங்கிக் கொள்கிறான்
சூரியன்
என் சட்டைப்பைகளில்
பத்திரப்படுத்தியிருந்த
யாரோ ஒருவனின்
போதைமாத்திரைகளையும்
மழுங்கிப்போயிருந்த
என் வேட்டைப்பற்களையும்
உதறிவிட்டு கரைசேர்ந்தேன்.
புலரும் பொழுதில் எனக்கான
நிலம் அழகுடுத்திக்
கொள்வதை பார்க்கிறேன்.




லக் ஷ்மன் குலசிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணியற்பியல் அற்புதமான ஈர்ப்பு அலைகள் மனிதவாழ்வுக்கு உறுதுணையாகும் விந்தை

மருத்துவர்
சி.யமுனாநந்தா



விண்ணியற்பியல் நிகழ்வுகள் பூமியில் உயிர்களின் ஆக்கக்கூற்று மூலக்கூறுகளின் உருவாக்கத்தில் பங்களிப்பதனை தற்போது விஞ்ஞானிகள் ஆராய்ந்துள்ளனர். பூமியில் அணுக் கருச்செயற்பாட்டில் ஈர்ப்பு அலைகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. விண்ணில் நியூட்ரன் நட்சத்திரங்கள் மொத்தல் அடையும்போது உருவாகும் ஈர்ப்பு அலைகள் பூமியில் அயடீன், புரோமின் அணுக்கள் உருவாகுவதற்கு காரணமாக அமைகின்றன.

இரண்டு நியூட்ரன் நட்சத்திரங்கள் ஒன்றிணைந்து ஒடுங்கி அழியும்போது சக்தியானது ஈர்ப்பு அலைகளாகக் காணப்படும்.

மனிதன் உட்பட முலையூட்டிகளின் உடற்றொழிலியல் அமைப்பில் அயடீன் மூலகமும் புரோமின் மூலகமும் இன்றியமையாதவையாகும். தைரொயிட் ஓமோனில் அயடீனும்; கொலாயன் இழையங்களில் புரோமினும் ஆக்கக்கூற்று மூலகங்களாகக் காணப்படுகின்றன. மனித உடற்கூற்றில் ஐதரசன், காபன், ஒக்சிசன் உட்பட 25 அத்தியாவசியமான மூலகங்கள் காணப்படுகின்றன.

அணு எண் 35இற்கு உட்பட்ட அதாவது இரும்பினை விட இலேசான அணுக்கள் சுப்பநோவா நட்சத்திரங்கள் அழியும்போது பிரபஞ்சத்தில் காழப்படும்.

தோரியம், யுரேனியம் என்பன பூமியில் மனித வாழ்வுக்கு மறைமுகமாக உதவுகின்றது. பூமியில் உள்ளோட்டில் உள்ள தோரியம், யுரேனியம் போன்ற பார உலோகங்களின் கருக்காழல்கள் ஈர்ப்பு அலைகளினால் தீர்மானிக்கப்படுகின்றன. இவற்றின் கருச்சக்தி மாற்றங்கள் புவியின் உள்ளோட்டில் உள்ளே நிகழ்வதால் புவித்தட்டுக்கள் நகர்கின்றன. புவித்தட்டுக்களின் நகர்வுகளே பூமியில் அமிழ்ந்துள்ள காபன்களை வளிமண்டலத்திற்கு வெளிக்கொணர உதவுகின்றது. இந்தக் காபன்கள் வளிமண்டலத்தில் நீருடன் தாக்கமடைந்தும் சிலிக்கேற்றுக்களுடன் தாக்கமடைந்தும் பூமியின் வளிமண்டலமானது பச்சைவீட்டுத்தாக்கத்தால் அற்றுப்போகாது பாதுகாக்கின்றது.

வேகமான நியுட்ரோன் உள்வாங்கல் பொறிமுறையே பார உலோகங்கள் தேய்வடைந்து போகாது பேண உதவுகின்றது.

குறிப்பாக பூமியில் இரும்பினை விட அணுத்திணிவு கூடிய மூலகங்கள் நிலைபேறுடையதாக அமைவதற்கு அதுவே காரணமாகும். அன்றேல் வெள்ளிக் கிரகம் போல் பூமியும் உயிர் சாகியம் வாழ முடியாதவாறு வறிதாகிவிடும்.

சுப்பநோவா நட்சத்திரங்கள் செயலிழக்கும் போது ஒரு கன சென்ரிமீற்றர் கனவளவில் ஒருமில்லியன் கெல்வின் வெப்பநிலையில் பத்தின் இருபத்தினான்காம் அடுக்கு நியுப்ரோன்கள் பார உலோக அணுக்களாக மாற்றமடைகின்றன.

புவியில் மனித வாழ்வுக்குத் தேவையான புரோமின், கடோலினியம், தோறியம், யுரேனியம், மொலித்தனம், கட்மியம் என்பவற்றில் 96 வீத பாத்திரமாக வேகமான நியூட்றன் உள்வாங்கும் பொறிமுறையே அமைந்துள்ளது.

வேகமான நியூட்ரன் நட்சத்திரங்கள் உள்வாங்கும் பொறிமுறை சுப்பநோவா நட்சத்திரங்கள் ஒடுங்கும் போது அவற்றின் வெப்ப அணுக்கருச்சக்தி மாற்றமடைவதால் ஏற்படுகின்றது. இரண்டு நியூட்டன் நட்சத்திரங்கள் இணையும் நிகழ்வு கிலோ நோவா எனவழைக்கப்படுகின்றது. இவ்வாறு பின்னல் வடிவில் இரண்டு நட்சத்திரங்கள் இணைதல் ஈர்ப்பு அலைகளினால் ஏற்படுகின்றது. இதன்போது வேகமான நியூட்ரன் உள்வாங்கும் பொறிமுறை நிகழ்கின்றது.

நட்சத்திரச் சோடிகள் ஒன்றை ஒன்று நோக்கிப் பின்னல் ஒழுங்கில் மில்லியன் வருடங்கள் நெருங்கி வரும்போது ஈற்றில் ஈர்ப்பு அலைகளாகச் சக்தி வெளிப்படுகின்றது. இவ்வாறான நிகழ்வுகளில் ஒன்றினை ஐக்கிய அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு மைய ஈர்ப்பு அலை நோக்கி நிலைகள் இரண்டினால் 2017ஆம் ஆண்டு உறுதி செய்துள்ளனர். இதன்போது காணப்படும் சக்தியின் அளவு ரில்லியன் கணக்கான வாற்றுக்கள் ஆகவும் நட்சத்திரங்கள் இணைந்து ஒடுங்கும் இறுதி கணத்தில் சில மில்லி



செக்கன்களில் நிகழ்வதாகவும் அமைகின்றன.

இன்றைய நவீன இயற்பியல் கண்டுபிடிப்புகள் எமது பண்டைய வானியல் கணிப்புகளையும் சோதிடத்தில் அமைந்துள்ள கிரகநிலை பலன்களையும் விஞ்ஞான ரீதியில் விளங்கப்படுத்துவதற்கு துணைபோகும்.

மின்காந்த அலைகள், ஒலி அலைகள், ஈர்ப்பு அலைகள் என்பவற்றின் பிரபஞ்சப்பரிமாணம் சிவநடனத்தை காட்சிப்படுத்துகின்றது. இங்கு ஈர்ப்பு அலைகள் நிலைகளின் நிலைகளை நடராஜப் பெருமானின் தாண்டவத்தின் 108 நிலைகளும் வெளிப்படுத்துகின்றன. சக்தி பின்னமிலான் எங்கள் பிரான் என சிவசோதியினை வழிபடும் சைவர்களின் மெய்யுணர்வும் பிரபஞ்ச ஈர்ப்பலைக் காழலுக்கு ஏதுவாக இரு நட்சத்திரங்களின் பின்னல் ஒழுக்கில் ஒடுங்கும் தன்மையும் இயற்பியல் தத்துவத்தை உணர்த்தி நிற்கின்றது.

## உயிர்ப் பிச்சை...!

பொன் மாலைப் பொழுது!
பலாலி வீதியிலே
பலரக வாகனங்கள்...!
முன்னால் முடுகிச் செல்லும்
'டொல்பின்' ரக வான் ஒன்று..!

தாய் ஆட்டின் சொல் கேளா
சுட்டியான குட்டி ஒன்று
வான் முன்னால் பாய்கையிலே...
நெஞ்சு பதைத்த வேளை...!
கடும் 'பிரேக்' இரைச்சலுடன்
வாகனம் தடுமாற...
உயிர் தப்பி தாய் சேரும்
துடிப்பான கறுத்தக் குட்டி!

தேரினால் கன்றை கொன்ற
மன்னனின் மகன் போலன்றி
வான் சில்லில் குட்டி காத்த
கண்ணிய சாரதியின்
புண்ணியத்தை போற்றுகிறேன்!

இரா.ஜெயக்குமார்

புதன்பொய்கைக்கு
நீங்களும் எழுதலாம்

- கட்டுரைகள்
- கவிதைகள்
- விமர்சனங்கள்
- நூல் அறிமுகம்
- பதிவுகள்
- அறிவியல்
- கலைப்படைப்புகள்

அனுப்பவேண்டிய முகவரி:
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலையாட்கள் தேவை**

யாழ் நகரில் இயங்கும் பிரபல **PVC பைப்** விற்பனை விநியோக நிறுவனம் ஒன்றிற்கு **விற்பனைப் பிரதிநிதி தேவை.** மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

**077 694 5632**

(CS/55138) J-1

**விற்பனைக்கு**

JB தொடர் இலக்க Scooty PEP, Pulsar, HE தொடர் இலக்க Hero Honda 100cc மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- **077 630 6697**

(பார்வையிடல் ஞாயிற்றுக்கிழமை மட்டும்)

(CS/55139) J-1

# நல்லூர்க் கந்தன் வைகாசி உற்சவம்

யாழ்ப்பாணம், மே 22

வரலாற்றுச்சிறப்புமிக்க நல்லூர்க் கந்த சுவாமி ஆலய வைகாசி விசாக உற்ச வம் இன்று புதன்கிழமை இடம்பெற வுள்ளது.


இன்று காலை 8 மணியளவில் சண்முக திரவ்ய மகா அபிஷேகம் ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து முற்பகல் 10.30 மணியளவில் சண்முக நியா ஸம், சகஸ்ர நாம அர்ச்சனை என்பன இடம்பெ றும். இன்று மாலை 4.45 மணியளவில் வசந்தமண்டபப் பூஜை இடம் பெற்று அத னைத் தொடர்ந்து முருகப் பெரு மான் வள்ளி, தெய்வயானை சமேதராராக உள்வீதி உலா வரும் திருக்காட்சியும் நடைபெறும்.

(ம-66)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 24.04.2024 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

**நடராஜா சக்திவேல்**



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (22.05.2024) புதன்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும். வீட்டுக் கிருத்திய கிரியைகள் 24.05.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியள வில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெற வுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

**குடும்பத்தினர்.**

077 516 3318, 077 057 1560, 0044 7476 796030

**அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.**

பிறப்பு 21.06.1953 இறப்பு 24.04.2024

(28126) (N-1)

## ஐந்தாம் ஆண்டு நினைந்துருகல்

பிறப்பு 14 . 11 . 1948



இறப்பு 15 . 06 . 2019

அமரர் திருமதி

**சறோஜினிதேவி கோபாலபிள்ளை**

திதி : வைகாசித் திங்கள் பூர்வபக்க சதுர்த்தசி (22.05.2024)

அம்மா எங்கள் ஆருயிர் அன்புத் தெய்வமே அம்மா
நீங்கள் எமை பிரிந்து ஐந்தாண்டுகள் ஆனதோ
பிரிந்த உயிர் விண்ணில் நட்சத்திரமாய் மின்னுமென
நாங்கள் பிறர் சொல்லிக் கேட்டதுண்டு தாயே அம்மா
உமை எந்த விண்மீனாய் நாம் என்று காண்போம் அம்மா

அம்மாவின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல (யாழ் அரசடி, பண்டாரகுளம்) பிள்ளையாரையும், நயினை நாகபூசணி அம்மனையும், நல்லூரானையும் பிரார்த்திக்கின்றோம்.

2/1, மூர்த்த விநாயகர் வீதி,
கடுக்காயடிலேன்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் துயருறும் பிள்ளைகள்

(CS/55130) J-1

## 30ஆம் ஆண்டு நினைவுகளுடன்.....







**அமரர் வே.சின்னத்தம்பி**
(கணக்காய்வாளர் - ஓய்வுநிலை)
(வலிகாமம் கிழக்கு, நீர்வேலி ப.நோ.கூ. சங்க முன்னாள் தலைவர்)
தோற்றம் 15.02.1930

**செல்வி சி.சிவதர்சினி**
(உயர்தர மாணவி)
தோற்றம் 29.10.1976

**செல்வி க.புஷ்பராணி**
தோற்றம் 17.07.1966

**மறைவு : 22.05.1994**

கடந்த 22.05.1994 அன்று காலை இடம்பெற்ற (Super Sonic) விமான தாக்குதலில் அகால மரணமடைந்த அப்பா, சகோதரி, மச்சாளின் 30 வருட நினைவுகளுடன்....

கண் முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து நீங்கள் விண்நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாது உங்கள் நினைவுகள்

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(cs 55137) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டு விழா பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், மே 22

காரைநகர் பிரதேச செயலகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழா காரைநகர் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை பிற்பகல் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. எனினும், சீரற்ற காலநிலை காரணமாக விளையாட்டு விழா பிற்போடப்பட்டுள்ளதாக காரைநகர் பிரதேச செயலகத்தினர் அறிவித்துள்ளனர். (ம-66)

## இந்தியாவில் கைதானோர் தொடர்பில் இலங்கையில் தீவிர விசாரணைகள்!

கொழும்பு, மே 22

ஐ.எஸ். பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள இலங்கையர்கள் தொடர்பில் இலங்கையிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்திய பயங்கரவாத எதிர்ப்பு பொலிஸாரால் மேற்படி இலங்கையர்கள் நால்வரும் அகமதாபாத் விமான நிலையத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள், ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக் - சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) தீவிரவாத குழுவைச் சேர்ந்தவர்கள் எனவும், இந்தியாவில் தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டிருந்தனர் என்றும் இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. ஐ.பி.எல். தொடரின் பிளேஓவ் ஆட்டங்கள் இடம்பெற்றுவரும் அகமதாபாத்தில் பல்லாயிரம் மக்கள் ஒன்றுகூடும் இடங்களில் இவர்கள் தாக்குதலுக்குத் திட்டமிட்டிருக்கலாம் என்ற கோணத்தில் தற்போது விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், கைதான இலங்கையர்கள் நால்வரின் வதிவிடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், விசாரணைகள் இடம்பெறுகின்றன என்று இலங்கை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. குறித்த நால்வரின் தொலைபேசிகள் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளதுடன் பாகிஸ்தானில் உள்ள முகவர்கள் தாக்குதலில் பயன்படுத்தக்கூடிய சில ஆயுதங்களை வழங்க அவர்களுக்கு உறுதியளித்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. (ம-44)


## அறிவித்தல்

வருடாந்தம் நடைபெறவுள்ள நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவ காலங்களில் யாழ்ப்பாணம் மாநகர சபையினால் வழமை போன்று முன்னெடுக்கும், போக்குவரத்து, பாதுகாப்பு ஏற்பாடுகள், சுகாதார மருத்துவச் செயற்பாடுகள், உள்நுழைவு அனுமதி வழங்கல் போன்ற செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடலுக்கு நல்லூர் ஆலய உற்சவ கால வீதித்தடைப் பகுதிக்குள் நிரந்தரமாக வசித்து வரும் குடியிருப்பாளர்கள் மற்றும் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடுவோர் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

- **இடம்** : சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கேட்போர் கூடம், யாழ்ப்பாணம் மாநகரசபை.
- **காலம்** : **2024.05.28** செவ்வாய்க்கிழமை
- **நேரம்** : மாலை **4.00**

**மாநகர ஆணையாளர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(cr. 42479) (N-1)

## ஆலய விசேட பொதுக்கூட்டம் பிற்போடல் விடயமாக

**அளவெட்டி அழகொல்லை விநாயகர் ஆலய தர்ம பரிபாலன சபை**

மேற்படி ஆலயத்தின் விசேட பொதுக்கூட்டம் 26.05.2024 ஞாயிற்றுக்கிழமை நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டது. தவிர்க்க முடியாத காரணத்தால் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

**ஆலய தர்ம பரிபாலன சபை**
**செ.கணேசராசா**
**உப செயலாளர்**
077 958 4607

(CS/550) J-1

# INVITATION FOR BIDS (IFB)

## IFB No : 2024/02

## DEPARTMENT OF LOCAL GOVERNMENT, NORTHERN PROVINCE VELANAI PRADESHIYA SABHA

1. **The Chairman, Local Authority Procurement Committee, on behalf of the Velanai Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for the civil works as described below.**


| No | Contract No | Contract Name | Source of Fund | Estimated Cost (Rs. Mn) | Required CIDA Grade & Specialty | Contract Period (Days) | Bid Validity Period | Bid Security Amount (Rs) | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | NP/14/41(18)/02/ PSDG(Special stamp duty)/2024 | Construction of Iyanaar kovil road at Allaipiddy | PSDG (Stamp Duty) | 1.035 | C8 or C9 in Highway Construction | 60 | 10-July-2024 | 15,000.00 | 07-Aug-2024 |
| 02 | NP/14/41(18)/02/ Maintenance/2024 | Renovation of Water Supply Road, Velanai - east | Maintenance-2024 | 1.271 | C8 or C9 in Highway Construction | 60 | 10-July-2024 | 19,000.00 | 07-Aug-2024 |

2. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty mentioned in Schedule for grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA).
4. Qualification requirements to qualify for contract award are included in Section 4 (Qualification Information) and Section 5 (Bidding Data and Contract Data) in the Bidding Document.
5. Interested bidders may obtain further information from Secretary, Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai. (T.P No: 021 221 1506, Fax No: 021 221 1506) and inspect the bidding documents at Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai from 22-May-2024 until 11-June-2024 between 09:00 Hrs to 15:00 Hrs on normal working days.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai from 22-May -2024 until 11- June-2024 between 09:00 Hrs to 15:00 Hrs on normal working days upon payment of a non-refundable fee of Rs.1,500.00.The method of payment will be by cash.
7. Bids (Original and Copy)shall be delivered to Chairman, Local Authority Procurement Committee, Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai on or before 10:30 Hrs on 12- June-2024. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
8. All bids shall be accompanied by a Bid Security as stated in the Table above.
9. The Pre-Bid Meeting will be held at Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai on 05th June 2024 at 11:00 hrs, Interested Bidders may participate in this meeting their own expenses.

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC),**
**Velanai Pradeshiya Sabha,**
**Vangalavady junction, Velanai**
**22.05.2024.**

(CR/42483) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருக்கேதீஸ்வரத்தில் நேற்றுத் தேர்த்திருவிழா

வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய வருடாந்தத் தேர்த்திருவிழா நேற்றுப் பக்திப் பூர்வமாக இடம்பெற்றது.

மகோற்சவப் பெருந்திருவிழா கடந்த 13ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ச்சியாக திருவிழா இடம்பெற்று வருகின்றது. நேற்றுத் தேர்த் திருவிழா இடம்பெற்றது. தொடர்ந்து உற்சவ மூர்த்திகளுக்கு வசந்த மண்டபத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து உற்சவ மூர்த்திகள் உள்வீதி, வெளிவீதி உலா வந்தனர்.

அதனைத் தொடர்ந்து உற்சவ மூர்த்திகள் தேரில் ஆரோகணித்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் வடம்பிடிக்க பஞ்சரத பவனி இடம்பெற்றது. தொடர்ந்து பஞ்ச மூர்த்திகளுக்கு, தேரில் பச்சை சாத்தப்பட்டதைத் தொடர்ந்து உற்சவ மூர்த்திகள் ஆலயத்தில் எழுந்தருளினார்கள். (ம-56)

## கனடாவின்...

இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் உள்ளதாவது:-

33 நாடுகளால் பயங்கரவாத அமைப்பு எனப் பிரகடனப்படுத்தப்பட்ட, தனிநாடு கோரிப் போராடிய புலிகள் இயக்கத்துக்கு எதிராகவே இலங்கை அரசாங்கம் யுத்தம் செய்தது. கனேடியப் பிரதமரின் கூற்று புலம்பெயர்ந்த இலங்கையர்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்தும். இலங்கையிலுள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம், பறங்கியர் இன மக்கள் அனைவருமே யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் புலிகளால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறிருக்கையில், கனேடியப் பிரதமரின் கூற்று இனங்களிடையே நல்லிணக்கத்தையும் ஒற்றுமையையும் ஏற்படுத்தும் இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகளைப் பாதிக்கும்.

எமது வரலாற்றைப் பிழையாகக் கூறும் கனேடியப் பிரதமரின் கூற்று சமூக ஊடகங்கள் ஊடாக எதிர்காலச் சந்ததியினருக்குப் பிழையான தகவலையே வழங்கும். இலங்கையில், சமாதானத்தை எட்டுவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கனேடிய அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறோம்.

யுத்தம் நடைபெற்றபோது யுத்தம் நடைபெற்ற பிரதேசதில் சிக்குண்ட மக்களுக்கு உணவு, மருந்து என்பவற்றை நாங்கள் ஒழுங்காகவும் திட்டமிட்ட வகையிலும் ஐ.நா., சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் போன்ற சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களினூடாகவும், உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களினூடாகவும் தொடர்ச்சியாக அனுப்பி வைத்தோம். புலிகள் மனிதக்கேடயங்களாக பாவித்த பொதுமக்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் வெளியேற்றினோம். இலங்கையின் முன்மாதிரியான தமிழ்த் தலைவர் லக்ஷ்மன் கதிர்காமரை புலிகள் திட்டமிட்டுக் கொலை செய்தனர் என்பதையும் நினைவுபடுத்துகின்றோம் - என்றுள்ளது. (அ-ம-6)

## சனி...

ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வங்காள விரிகுடாவில் தமிழ்நாட்டுக்குக் கிழக்காக அடுத்த 36 மணி நேரத்தில் காற்றமுத்தத் தாழ்வு மண்டலம் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது நாளை மாலையளவில் ஒரு சிறிய புயலாகி வடக்கு வடமேற்குத் திசை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக எதிர்வரும் 25 ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளிலும் கனமானது முதல் மிகக் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. அத்துடன் அதிகளவான இடி மின்னலுடன் மழை கிடைக்கும் வாய்ப்புள்ளதனால் அவதானமாக இருப்பது அவசியம்.

இலங்கையின் வடக்கு - கிழக்கு மற்றும் மேற்குக் கரையோரங்களில் காற்றின் வேகம் மணிக்கு 40 கிலோமீற்றரைவிடக் கூடுதலான வேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடற்பகுதிகள் மிகவும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும். மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்ப்பது சிறந்தது. அத்துடன் பலநாட் கலங்களுடன் ஆழ்கடலுக்கு மீன்பிடிக்குச் சென்றவர்கள் பாதுகாப்புக்கான ஏற்பாடுகளை மேற்கொள்வது சிறந்தது.

வடக்கு மாகாணத்தின் கடந்த 100 ஆண்டு கால காலநிலை வரலாற்றில் அதிகூடிய மே மாத மழைவீழ்ச்சி இந்த ஆண்டு நிகழ்ந்துள்ளது. வடக்கு மாகாணத்தின் மே மாத சராசரி மழைவீழ்ச்சி 90 மில்லி மீற்றர். மே மாத மழை நாட்கள் சராசரியாக 6. ஆனால், இவ்வாண்டு, மாதம் முடிவடைய இன்னமும் பத்து நாட்கள் உள்ள நிலையில் இடம் சார்ந்த ரீதியில் வேறுபாடுகள் காணப்பட்டாலும் மாகாண சராசரி என்ற வகையில் இன்று வரை 280 மில்லிமீற்றர் மழை கிடைத்துள்ளது. இம்மாத இறுதியில் இதன் அளவு இன்னமும் அதிகரிக்கும். இந்த மாதத்தின் இதுவரையான 20 நாட்களில் 12 நாட்கள் மழை கிடைத்துள்ளது.

ஒப்பீட்டளவில் முல்லைத்தீவு மாவட்டத்தின் கிழக்குப் பகுதிகள், யாழ்ப்பாண மாவட்டத்தின் வலிகாமம் பகுதிகள் அதிக அளவிலான மழைவீழ்ச்சியைப் பெற்றுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-66)

## இலங்கை...

வலுவான ஒத்துழைப்புக் காணப்படுகின்றது. இருநாடுகளுக்கும் பொதுவான பரஸ்பர நலன்களை முன்னிறுத்தி இணைந்து பணியாற்றுகின்றோம். துறைமுகம், புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் போன்றவற்றில் மேலும் அதிகளவான இந்திய முதலீடுகளை எதிர்பார்க்கின்றோம். இந்தியா 'பொருளாதார சுபீட்சத்தை' நோக்கி நடைபோடுகின்றது. அது இந்தப் பிராந்தியத்துக்கும், இலங்கை போன்ற நாடுகளுக்கும் நன்மையளிப்பதாகவே அமையும்.

அதேபோன்று இருநாடுகளுக்கும் இடையிலான மக்கள் மயப்படுத்தப்பட்ட கலாசாரத் தொடர்புகளும் நீண்டகாலமாக நிலவிவருகின்றன. பௌத்த மதம் இந்தியாவிடமிருந்து இலங்கைக்குக் கிடைத்த பெரும் பரிசாகும். எனவே இருநாடுகளுக்கும் இடையிலான மக்கள் தொடர்புகளையும், சுற்றுலாத் துறையையும் மேலும் வலுப்படுத்துவதற்கான முதற்கட்ட நகர்வாக இராமாயணத்தை அடிப்படையாகக்கொண்ட இருநாட்டுத் தொடர்புகள் அமையுமென நம்புகின்றேன்.

இந்திய மக்களின் ஆதரவுடன் ஆட்சியமைக்கப்போகும் புதிய அரசாங்கத்துடனும் நாம் இணைந்து பணியாற்றுவோம் - என்றார். (அ-ம)

## ஜனாதிபதித்...

வருகின்றன என அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் மனுஷ மேலும் தெரிவித்ததாவது:-

"நாட்டில் என்ன தேர்தல் நடைபெறவுள்ளது என பலரும் கேள்வி எழுப்பிவருகின்றனர். முதலில் ஜனாதிபதித் தேர்தலே நடத்தப்படும். அதற்கான அனைத்து ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை வெற்றிபெறவைப்பதற்குரிய ஏற்பாடுகளை ஐக்கிய தேசியக் கட்சி முழுவீச்சில் முன்னெடுத்து வருகின்றது.

இந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடமாட்டார் என்ற தகவலை ஐக்கிய மக்கள் சக்தி பரப்பிவருகின்றது. ரணில் விக்கிரமசிங்க மீதான அச்சத்தாலும், தோல்வி பீதியாலுமே இவ்வாறான பரப்புரைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் தேர்தலில் போட்டியிடுவார். இது தொடர்பாக அடுத்த மாதம் அவர் அதிகாரபூர்வமாக அறிவிப்பார். அதன்பின்னர் பலரும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவார்கள்" - என்றார். (அ-ம-44)

## தாய்லாந்துக்...

கள் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர். அவர்கள் இலங்கையின் வலுசக்தி அமைச்சில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலிலும் கலந்துகொண்டுள்ளனர்.

தாய்லாந்து பிரதமரின் அறிவுறுத்தலின் பேரில், எதிர்கால ஒத்துழைப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியில் முதலீடு செய்வதற்கான சாத்தியக்கூறு மற்றும் அவற்றை மதிப்பிடுவதற்காக, குறிப்பாக மின்சார உற்பத்தியில் கவனம் செலுத்துவதற்காக இந்தப் பிரதிநிதிகள் குழு இலங்கை வந்துள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜயசேகர தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அண்மைக்காலமாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில், புதிய முதலீடுகளைத் தொடர்ச்சியாக உள்ளீர்த்துவரும் பின்னணியில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## ஈரான்...

ஈரான் ஜனாதிபதியின் இறுதிச் சடங்குகள் நேற்று ஆரம்பமாகியுள்ளன. அவருடைய ஜனஸா நாளை வியாழக்கிழமை மஷாத் நகரில் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது. இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்காக உலகின் பல பகுதிகளில் இருந்தும் பல்வேறு இராஜதந்திரிகள் ஈரானை நோக்கி விரைந்துள்ளனர். இந்த நிலையிலேயே, இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும் ஈரானுக்குச் சென்றுள்ளார். (அ-ம)

## சந்திரன்...

தினார்கள். சுமார் இரண்டு மணித்தியால ஆர்ப்பாட்டத்தின் பின்னர் பொலிஸார் குவிக்கப்பட்டு போராட்டக்காரர்கள் வெளியேற்றப்பட்டனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளரும் சட்டத்தரணியுமான க.சுகாஷ் உட்படப் பலரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். (அ-ம)

## மீனவர்களே...

எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் சூரியராஜா இது தொடர்பில் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணக் குடாநாட்டுக் கடற்பரப்புகளில் இன்றும், நாளையும் மீனவர்கள் மிகவும் அவதானத்துடன் செயற்படவேண்டும். ஏனெனில் காற்றின்வேகம் மணித்தியாலத்துக்கு 80 கிலோமீற்றர்கள்வரையில் அதிகரித்து வீசக்கூடும்.

மழை காரணமாக யாழ்ப்பாணத்தில், கடந்த 24 மணித்தியாலத்தில் 80.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இதேவேளை - வேலணையில் அமைந்துள்ள ஓர் ஆலயம் காற்றாலும், புங்குடுதீவு மகா வித்தியாலயம் மின்னல் தாக்கத்தாலும், நல்லூர் மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள மூன்று வீடுகள் காற்றாலும் பாதிக் கப்பட்டுள்ளன - என்றார். (அ-ம-125)

## பாடசாலைகளுக்கு...

களும் இன்று புதன்கிழமை வழமை போலச் செயற்படவுள்ளன. அத்துடன், தற்போதுள்ள சூழ்நிலையின் அடிப்படையில் முடிவெடுக்கும் அதிகாரம் மாகாணக் கல்விச் செயலாளர்கள் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கு உண்டு என்பதை இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறோம் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-66)

## மயங்கி...

யார் ஆலயத்துக்கு அருகே இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சிங்கரத்தினம் சசிக்குமார் (வயது-48) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுக்கரைக்குளத்தின் கீழ் 3,495 ஏக்கரில் சிறுபோகம்!

**மன்னார், மே 22**

**தற்போது நிலவும் மழையுடனான காலநிலையைக் கருத்தில் கொண்டு இந்த ஆண்டு 3 ஆயிரத்து 495 ஏக்கரில் சிறுபோகம் மேற்கொள்ளப்படவுள்ளது என்று மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.**

மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கட்டுக்கரைக் குளத்தின் கீழ் புலவு நிலங்களின் கீழான சிறுபோக நெற்செய்கைக்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. வழங்கப்பட்ட 3 ஆயிரத்து 495 ஏக்கருக்கு மேல் யாராவது அத்துமீறி நெற்செய்கையில் ஈடுபட்டால் உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். புலவுகள் ஒதுக்கப்படும் போது மீதமாக இருக்கும் புலவுகளை ஏலத்தில் விட்டு அவற்றை மன்னார் மாவட்ட கல்வி அபிவிருத்துக்காக ஒதுக்கத் தீர்மானித்துள் ளோம். உதவித் தொகை பெறும் மாணவர்கள் நிரந்தர நியமனங்கள் பெறும்போது தாங்கள் பெற்ற பணத்துக்கு 4.5 வீத வட்டியைச் செலுத்துவதன் மூலம் இந்த உதவி வழங்கல் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் - என்றார்.

(எ-25-60-56)

## நிர்வாகம்

சைவப் பரிபாலன சபையின் 101ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது நடைபெற்ற புதிய நிர்வாக சபைத் தெரிவில் தலைவராக உ.தயானந்தன், செயலாளராக சே.செல்வராஜ், பொருளாளராக பா.காசிநாதன், பரீட்சை செயலாளராக வி.தயாபரன், சமய பிரசாராக சு.சிவபாதசுந்தரம், உப தலைவர்களாக செ.ஜெயபாலசிங்கம், பி.என். சுதர்சன், உபசெயலாளராக தி.சுதர்மன், மேலதிக உப செயலாளராக கலாநிதி ச.நந்தினி, உபபரீட்சை செயலாளராக லோ.துஷிகரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

(ச)


**வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை**

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்

தொடர்புகளுக்கு:

074 173 7684

(CS/55110) J-1

**வேலைவாய்ப்பு**

வலி. மேற்கில் இயங்கும் பல்பொருள் விற்பனை அங்காடி ஒன்றிற்கு **விற்பனை உதவியாளர்கள் தேவை.** கல்வித் தகைமைக்கேற்ப கொடுப்பனவுகள் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். விபரங்களுக்கு

074 252 2599

(CS/55141) J-1

**வேலைவாய்ப்பு**

யாழ். நகரில் இயங்கிவரும் எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடத்திற்கு விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப் படுகின்றன.

1. ஒப்புநோக்குநர் (பகல், இரவு)

நேரில் சமுகம்தரவும்.

காலம்: இன்று (22.05.2024) (புதன்கிழமை)

நேரம்: காலை 9.00 - 2.00 மணிவரை. மாலை 6.00 - 8.00 மணிவரை.

**உதயன் பணிமனை**

இல.361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.




**Eldiseno Pvt (LTD)**

| | | | |
|---|---|---|---|
| A1 | COLOUR PRINT 500/- - 600/- , | B&W | PRINT 400/- |
| A2 | COLOUR PRINT 250/- - 300/- , | B&W | PRINT 200/- |
| LEGAL SIZE | 1 SQ.F COLOUR 100/- , | B&W | 70/- |

862/3, K.K.S Road, Jaffna. 075 040 6639

(CS/55142) J-1


## மரண அறிவித்தல்



தோற்றம் 27 . 07 . 1936

மறைவு 21 . 05 . 2024

**சோமசுந்தரம் திருஞானசம்பந்தமூர்த்தி**

(ஓய்வுபெற்ற உப அதிபர் சென் தோமஸ் கல்லூரி - குருத்தலாவை)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் நல்லூர், திருகோணமலையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் திருஞானசம்பந்தமூர்த்தி நேற்று (21.05.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - கண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற யோகராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சுகந்தரியின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான கணேசரட்ணம், அருணாச்சலம், புனிதவதி, திலகவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2024) புதன்கிழமை காலை 7.00 மணியளவில் இல.314, கோவில் வீதி, நல்லூரில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 8.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**

**குடும்பத்தினர்**

**077 890 8015**

(cr 42466) (N-1)


**INFORMATION TECHNOLOGY PARK**

*Jaffna, Srilanka*

*Under the purview of the Ministry of Investment Promotion*

MPCS Building, 127,K.K.S.Road, Jaffna, Srilanka

Office :- 021 222 3641

Fax No :- 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

O/L பரீட்சை எய்திய மாணவர்களுக்கான விசேட பிரிவுகள்

June Batch

- Dip.in Microsoft Office
- Dip.in Desktop publishing
- Dip.in Information Technology
- Dip.in Computer Programming
- Dip.in Wep Page Designing

06 Month

- Dip.in PC Application & Office Management

06 Month

- VB.net
- PHP
- C/C++
- C#
- Java
- AutoCAD

20 hours

- Internet & e-mail
- Hardware

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்

வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் :- 07.06.2024

வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் :- 08.06.2024

*CENTRE FOR INFORMATION TECHNOLOGY*

- OFFICER IN CHARGE -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம்: 021-493 1111
மின்னஞ்சல் : news@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.